ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ செப்டம்பர். 23, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 357 ❖ ரூ.10

பெரும்பான்மை பெற்ற அரசின் வலிமை மீண்டும் நிரூபணம்

# பெருமிதம்

## சில முடிவுகள் மட்டும்தான் நாட்டின் எதிர்காலத்தை மாற்றும் வல்லமை கொண்டது. அப்படியான ஒரு முடிவுக்கு நாம் சாட்சிகளாகி இருக்கிறோம்; பிரதமர் மோடி



புதுடெல்லி, செப். 23-

**"மகளிர் இடஒதுக்கீடு மசோதா சாராதண சட்டம் அல்ல; அது புதிய இந்தியாவுடைய புதிய ஜனநாயகத்தின் உறுதிமொழி" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பாஜகவின் மகிளா மோர்ச்சா நடத்திய பாராட்டு விழா கூட்டத்தில் பிதரமர் மோடி கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர்,"நான் இந்தியாவின் தாய்மார்கள், சகோதரிகள், மகள்கள் ஆகியோருக்கு எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். செப்டம்பர்.21, 22 ஆகிய தேதிகளில் இருந்து புதிய வரலாறு உதயமாகியிருப்பதை நாம் காண்கிறோம்.

இந்த வரலாற்றை உருவாக்க மக்கள் நமக்கு முன்னுரிமை கொடுத்து வாய்ப்பளித்துள்ளனர். சிலமுடிவுகள்மட்டும்தான் நாட்டின் எதிர்காலத்தை மாற்றும் வல்லமை கொண்டது. அப்படியான ஒரு முடிவுக்கு நாம் சாட்சிகளாகி இருக்கிறோம். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மகளிர் மசோதா தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருப்பது பெரும்பான்மை பெற்ற அரசின் வலிமையை மீண்டும் நிரூபித்துள்ளது. யாருடைய சுயநலமும் மகளிர் மசோதாவை தடைசெய்வதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தேசத்தை முன்னெடுத்துச் செல்ல தீர்க்கமான முடிவுகளை எடுக்க பெரும்பான்மையான, வலிமையான அரசு வேண்டும் என்பதை இந்த நிகழ்வு மீண்டும் நிரூபித்துள்ளது" என்று தெரிவித்தார்.

கடந்த 1999, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டும் நிறைவேறாமல் போனது. 2010-ம் ஆண்டில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேறியது. ஆனால், மக்களவையில் நிறைவேறவில்லை. இந்நிலையில், நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடர் கடந்த 18-ம் தேதி தொடங்கியது. இதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூட்டத்தின் 2-வது நாள் நிகழ்வுகள், புதிய நாடாளுமன்றத்தில் நடந்தன.

அப்போது முதல் மசோதாவாக, மக்களவையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. விவாதத்துக்கு பிறகு, உறுப்பினர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 454 உறுப்பினர்களும், எதிராக2உறுப்பினர்களும் வாக்களித்தனர். பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவு அளித்த நிலையில், கடந்த 20-ம் தேதி (நேற்று முன்தினம்) இந்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

அதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் இந்த மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் நேற்று தாக்கல் செய்தார். மக்களவை, மாநிலங்களவையில் பெண்களின் பிரதிநிதித்துவம் தற்போது 15 சதவீதத்துக்கு குறைவாகவே உள்ளது. பல மாநிலங்களின் சட்டப்பேரவையில் பெண்களின் பங்கு 10 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது.

இந்நிலையில், பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் மசோதா மீது விவாதம் நடைபெற்றது. இந்த மசோதாவுக்கு கட்சி வேறுபாடின்றி தலைவர்கள் ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேறியது.

எனினும், வரும் 2024 மக்களவை தேர்தலில் இது அமலுக்கு வராது. தேர்தலுக்கு பிறகு, மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்து, அதன் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்து, அதன்பிறகு நடக்கும் தேர்தலில்தான் அமலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.




தமிழ்நாடு முதலமைச்சரும், மாநிலத் திட்டக் குழுத் தலைவருமான மு.கஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரக, மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / முதலமைச்சரின் செயலாளர் முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கோபால், நிதித்துறை செயலாளர் (செலவினம்) நாகராஜன், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் - பேராசிரியர் இராம. சீனுவாசன், பேராசிரியர் விஜயபாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், தீனபந்து, (ஓய்வு), பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், மருத்துவர் கு.சிவராமன், முனைவர் நர்த்தகி நட்ராஜ், உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) கதா ராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் டெங்கு பாதித்த 343 பேருக்கு சிகிச்சை
## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை , செப். 23-

"ஆண்டுதோறும் 2.50 லட்சத்துக்கும்மேற்பட்ட டெங்கு மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2023-ஆம் ஆண்டில் இதுவரை 4,227 நபர்களுக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டு, தற்பொழுது 343 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. இந்த ஆண்டு 3 நபர்கள் இறந்துள்ளனர்" என்று தமிழகமருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.



அடையாறு மண்டலம், பெசன்ட் நகர் பகுதியில் டெங்கு விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்துப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "வடகிழக்குப்பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து அந்தந்த மாவட்ட நிர்வாகம் பொதுமக்களுக்கு டயர், பிளாஸ்டிக் கப்புகள், தேங்காய் சிரட்டை போன்ற கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றிட விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கொசு ஒழிப்புநடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற தொடர்நடவடிக்கைகளை தீவிரமாக மேற்காள்ள தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

இதுபோன்ற கொசு ஒழிப்புநடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் அமைத்தல் போன்ற பணிகள் தென்மேற்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவும், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவும் நடத்தப்பட்டு வருகிறது. பருவமழைக்காலங்களில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்குத் தேவையான உயிர்க்காக்கும் மருந்துகளும், இரத்த அணுக்கள்பரிசோதனைக் கருவிகள்,இரத்தக்கூறுகள் மற்றும்இரத்தம்ஆகியவை போதிய அளவு இருப்பு வைக்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பொது சுகாதாரத்துறையோடு இணைந்து உள்ளாட்சி அமைப்புகள், டயர், பிளாஸ்டிக் கப்புகள், தேங்காய் சிரட்டை போன்ற தேவையற்ற கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இதுமட்டுமில்லாமல் பொதுப்பணித்துறை மற்றும் வீட்டுவசதித் துறை போன்ற பல்வேறு துறைகளுடன் இணைந்து அந்தந்த அமைப்புகளின் சார்பில் கட்டப்படுகிற பொதுக் கட்டடங்கள், அரசு அலுவலகங்கள், உணவகங்கள், பூங்காக்கள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்றும் பணிகளும் நடைபெற்று வருகின்றது. இந்திய மருத்துவ முறை மருந்துகளான நிலவேம்பு குடிநீர் மற்றும் பப்பாளி இலைச்சாறு போன்றவை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் பாதிப்புக்காக சிகிச்சைமேற்கொள்ளும் நபர்களின் விவரங்களை உடனடியாக அரசுக்கு தெரிவிக்க அனைத்து மருத்துவமனைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனை வளாகங்கள் குறிப்பாக மகப்பேறுமருத்துவமனை வளாகங்களை மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என கடந்த வார கூட்டத்தில் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது" என்று அவர் கூறியுள்ளார்.

# கோவையில் மீண்டும் போட்டியிடுவேன்
## மநீம தலைவர் கமல்ஹாசன் திட்டவட்டம்




கோவை , செப். 23-

**''எனக்கு மூக்கு உடைத்தாலும் பரவாயில்லை, மருந்து போட்டு வந்து மீண்டும் கோவையில் நிற்பேன்'' என்றுமக்கள்நீதிமய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் பேசினார்.**

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக மக்கள் நீதி மய்யத்தின் கோவை மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கோவை அவிநாசி சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் நேற்று நடந்தது. இந்தக் கூட்டத்துக்கு கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தலைமை வகித்தார். அப்போது கட்சி நிர்வாகிகளிடையே அவர் பேசியதாவது: "சனாதனம் என்ற ஒரு வார்த்தை சொன்னதற்காக சிறுபிள்ளையை தாக்குகின்றனர். அது அவரது தாத்தாவுக்கு தாத்தா கூறிய தகவல் என்றார். எங்களுக்கு அந்த வார்த்தையை சொன்னவர் பெரியார். சாமி இல்லை என சொல்வது பெரியாரின் வேலை அல்ல, சமுதாயத்துக்காக கடைசிவரை வாழ்ந்தவர் பெரியார்.திமுக அல்லது வேறு எந்த கட்சியும் பெரியாரை சொந்தம் கொண்டாட முடியாது, பெரியாரை தமிழகமே சொந்தம் கொண்டாடும்.

நாடாளுமன்ற தேர்தலை ஒன்றிய அரசு விரைவில் நடத்துவார்கள். கடந்த முறைஎம்எல்ஏதேர்தலில் தோல்வியடைந்த போதும் நெஞ்சை நிமிர்த்தி நடந்தேன். என் முகத்தில் அப்போது சோகம் இல்லை. மீண்டும் நாம் சூழ்ச்சிக்கு ஆளாகக்கூடாது என்று நினைத்தேன். எனக்கு வெவ்வேறு இடங்களில் இருந்து அழைப்பு வருகிறது. இந்த வயதில் அரசியலுக்கு வந்ததற்கு நான் மன்னிப்புதான் கேட்க வேண்டும். கருணாநிதி என்னை திமுகவுக்கு வருமாறு அழைத்தார். அப்போது நான் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரப்போகிறேன் என சொல்லியிருக்க வேண்டும். அப்பா காங்கிரஸில் இருப்பதால் காங்கிரசில் சேர்கிறேன் என சொல்லியிருக்க வேண்டும். அப்போதே அரசியலில் இறங்கி இருக்க வேண்டும்.

கோவையில் ஆறு சட்டமன்ற தொகுதிகள் உள்ளன, மொத்தமாக அனைத்து பூத்களிலும் பணியாற்ற40ஆயிரம்பேர் வேண்டும். கோவைக்கு வாங்க என கூப்பிடுவது மட்டும் போதாது, களப்பணியாற்ற 40 ஆயிரம் பேரை தயார் செய்யவேண்டும்.எனக்கு மூக்கு உடைத்தாலும் பரவாயில்லை, மருந்து போட்டு வந்து மீண்டும் கோவையில் நிற்பேன். நல்ல தலைமை தமிழகம் முழுவதற்கும் வர வேண்டும், அஜாக்கிரதையால் நாம் பலியாகி விடக் கூடாது. அனைவரும் சேர்ந்து தான் தேரை இழுக்க வேண்டும். கட்சிக்கு புதிதாக வருபவர்களுக்கு வேலியாக இருக்காமல் ஏணியாக இருக்க வேண்டும். கட்சியில் பதவி நிரந்தரம் இல்லை. உறவு தான் நிரந்தரம். பணியாற்றினால் பதவி நிரந்தரம்.

ஒருவரே பிரதமராக இருக்க வேண்டும் என நினைப்பது சர்வதிகாரம். இந்தி ஒழிக என சொல்லவில்லை. தமிழ் வாழ்க என்று சொல்கிறோம். இந்தி பேசினால் தான் வேலை என்றால், அந்த வேலை வேண்டாம். அன்பு ஒன்று தான் எனக்கு தெரிந்த மதம், அதைவிட பெரிய மதம் மனிதம்" என்று அவர் பேசினார்.



தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 95-வது வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பனீந்திரரெட்டி, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கட்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் நடராஜன், தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சுந்தரவள்ளி, நிதித்துறை இணைச் செயலாளர் கிருஷ்ணன் உன்னி, மாநில துறைமுக அலுவலர் கேப்டன் அன்பரசன், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி கடலோர கமாண்டர் ரவிக்குமார் தினகரா, கடலோர காவல் படை தலைவர் ரவாத், வாரிய உறுப்பினர்கள் மற்றும் வணிகக் கடல்துறை, சென்னை (மைய அரசின் பிரதிநிதி, துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம்) ராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன்று

# 23-9-2023

சக வருடம் 1945 ஆஷ்வினம் 01
வாழைத்தண்டு சமைத்து உண்டால் சிறுநீரக கற்கள் கரையும்

| சோபகிருது புரட்டாசி 6 | SEP - SAT சனி | ரபிஉல் அவ்வல் 7 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | வளர்பிறை 266 / 099 | மேஷம் - வெற்றி |

வளர். அஷ்டமி 05.17 (கா. 08.10) மூலம் 14.22 (கா. 11.48) திபாஜ் 10.30, 37.12 அகஸ் 30.07 சித்த. கேதார விரதாரம்பம். கரூர் தான்தோன்றி கல்யாண வேங்கடேச பெருமாள் திருக்கல்யாணம். நல்லாகுளம் ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாள் சேஷ வாகனத்தில் திருவீதியுலா.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 12.15-1.15 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்
கன்னியா லக்னம் இருப்பு நா. 4 வி. 10
சந்திராஷ்டமம் ரோகிணி மிருகசீருஷம்
கரணம் : 12-1.30 சூரிய உதயம் : 6.03
மின்னுவது எல்லாம் பொன்னல்ல

இராசிபலன்: மேஷம் - வெற்றி; ரிஷபம் - ஆதரவு; மிதுனம் - அசதி; கடகம் - நன்மை; சிம்மம் - வருத்தம்; கன்னி - அமைதி; துலாம் - செலவு; விருச்சி - பயம்; தனுசு - கவலை; மகரம் - உயர்வு; கும்பம் - வரவு; மீனம் - தாமதம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை நற்குணம் தனக்குத்தானே உண்மையாக இருப்பது

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,510 | Rs. 5,980 |


# "பெரியார் – மணியம்மையார் குறித்த பேச்சுக்கு வருந்துகிறேன்" அமைச்சர் துரைமுருகன்

சென்னை , செப். 23–

"தந்தை பெரியார், மணியம்மையாரை கட்சிப் பணிக்காக அழைத்துச் சென்றார்" என்று சொல்ல வேண்டிய இடத்தில், "தந்தை பெரியார், மணியம்மையாரை கூட்டிக் கொண்டு போய்விட்டார்" என்று பேசிவிட்டேன். "அழைத்துக் கொண்டு போனார்" என்பதற்கும் "கூட்டிக் கொண்டு போனார்" என்பதற்கும் மலைத்த வேறுபாடு இருப்பதை நான் உணர்கிறேன் என்று பெரியார் குறித்த பேச்சுக்கு அமைச்சர் துரைமுருகன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "செப்.17 அன்று வேலூரில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழா மற்றும் பவள விழா மாநாட்டில் நான் பேசும்போது, திமுகவுக்கும் ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்துக்கும் இருந்த தொடர்புகளை குறித்து பேசிக் கொண்டு வரும்போது, திமுக தோன்றியதற்கே காரணம் வேலூர் மாநகரம் தான் காரணம்.

வேலூருக்கு பிரச்சாரத்துக்குவந்ததந்தை பெரியார் மணியம்மையார் வீட்டில் தங்குவது வழக்கம் என்பார்கள். மணியம்மையாருடைய கட்சிப் பணியைப் பார்த்த பெரியார் கழகப் பணி ஆற்றுவதற்காக உடன் அழைத்துச் சென்றார். எதிர்காலத்தில் கட்சியைக் காப்பாற்ற ஒரு புத்திசாலி பெண் கிடைத்துவிட்டார் என்கிற வகையில் மணியம்மையாரை பெரியார் திருமணம் செய்து கொண்டார். இது பொருந்தா திருமணம் என்று அண்ணா திராவிட கழகத்தில் இருந்து வெளியேறினார். இதுதான் அன்றைய தினம் நான் பேசிய பேச்சின் சாரம்.

இதில் ஒரு தவறு எங்கே நடந்தது என்றால், "தந்தை பெரியார், மணியம்மையாரை கட்சிப் பணிக்காக அழைத்துச் சென்றார்" என்று சொல்ல வேண்டிய இடத்தில், "தந்தை பெரியார், மணியம்மையாரை கூட்டிக் கொண்டுபோய்விட்டார்" என்று பேசிவிட்டேன். "அழைத்துக் கொண்டு போனார்" என்பதற்கும் "கூட்டிக் கொண்டு போனார்" என்பதற்கும் மலைத்த வேறுபாடு இருப்பதை நான் உணர்கிறேன்.

என்னுடைய இந்த பேச்சு தமிழினத் தலைவர், அண்ணன் வீரமணிக்கும், தந்தை பெரியார் மற்றும் மணியம்மையார் மீது அடங்கா பற்று கொண்ட தோழர்களுக்கும் வருத்தம் தந்திருப்பதாக எனக்கு செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட ஒரு வார்த்தையை நான் என் பேச்சில் அந்தக் கூட்டத்தில் உபயோகப் படுத்தியதற்காக நான் என் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தந்தை பெரியார் இடத்திலும், ஆசிரியர் வீரமணி இடத்திலும் நான் எவ்வளவு கொள்கைப் பிடிப்பு கொண்டவன் என்பதை அண்ணன் வீரமணியே அறிவார்" என்று துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

# அறநிலையத்துறையை கண்டித்து புதுக்கோட்டையில் பொதுமக்கள் போராட்டம்



புதுக்கோட்டை , செப். 23–

புதுக்கோட்டை ஸ்ரீ பிரகதாம்பாள் கோவில் பெரியகுளம் ரூபாய் 88 லட்சம் மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் முறையாக தூர்வாராமல் அலட்சியம் செய்ததாகவும் முறையாக தூர்வாரக்கோரியும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலகத்திற்கு முன்பாக பெரியகுளம் சீரமைப்புபோராட்டகுழு சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

திருக்கோகர்ணம், மியூசியம், சன்னதி தெரு, திருச்சி ரோடு இரட்டை குளம், மேட்டு தெரு, மேல மேட்டு தெரு, மகாராஜபுரம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட பகுதி பொதுமக்கள் சார்பில் உண்ணாவிரத போராட்டம் அறநிலையத்துறை அலுவலகம் முன்பு நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோர் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 88லட்சத்து 50 ஆயிரத்து 398 ரூபாய் நிதியை முறையாக பயன்படுத்த கோரியும் குளத்தினை முறையாக தூர்வார வேண்டும், கழிவு நீர் முற்றிலும் கலப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் குளத்தில் உள்ள கழிவுகளை அகற்ற வேண்டும், குளத்தை சுற்றியுள்ள படித்துறைகளை சீரமைக்க வேண்டும், குளத்தின் நடுவே உள்ள மண்டபத்தை பழமை மாறாமல் சீரமைக்க வேண்டும், சமூக விரோதிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த கண்காணிப்பு கேமரா அமைக்க வேண்டும், நடைபாதை அமைத்து மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை விடுத்திருக்கும் அவர்கள் ஏற்கனவே புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதான பேச்சுவார்த்தை கூட்டம் நடத்தப்பட்டு 100 நாட்கள் ஆகியும் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்பதால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். பெரியகுளம் சீரமைப்பு அமைப்பு போராட்ட குழுவினர் உண்ணாவிரப் போராட்டத்திற்கு காவல்துறையினர் அனுமதி மறுத்ததால் குளத்தில் இறங்கி மண்டபத்தில் குடியேறும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437

### அரசு மதுபான கடை இயங்கும் சாலையில்

# கூட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை அதிமுக ஒன்றிய கவுன்சிலர் வேண்டுகோள்



சீர்காழி, செப். 23–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய குழு கூட்டம் ஒன்றிய குழு தலைவர் கமலஜோதி தேவேந்திரன் தலைமையில் நடைபெற்றது.


இதில் திருநகரி அதிமுக ஒன்றிய கவுன்சிலர் நடராஜன் பேசுகையில் மங்கைமடம் பகுதியில் அதிமுக ஆட்சியின்போது ஒதுக்குப்புறமாக இருந்த அரசு மதுபான கடையை அகற்றிவிட்டு தற்போது மங்கைமடத்தில் சீர்காழி செல்லும் பிரதான தேசிய நெடுஞ்சாலையில் அரசு மதுபான கடை இயங்கி வருகிறது.

இதனால் தினந்தோறும் அதிகப்படியான விபத்துகளும், வாகன நெரிசல்களும் ஏற்படுகிறது. இப்பகுதி வழியாக பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவிகள் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் இந்த பகுதியில் அடிக்கடி முக்கிய பிரமுகரின் மனைவி அவர் வீட்டுக்கு வரும்போதும் போகும்போதும் கூட மதுபான கடை இருக்கும் சாலையில் உள்ள கூட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை என அரசு அதிகாரிகளே புலம்பும் கேவலமான நிலையில் அரசு மதுபான கடை இங்கே இயங்கி வருகிறது. எனவே உடனடியாக அரசு மதுபானக் கடையை அகற்ற வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மதுபான கடையினால் சுற்றியுள்ள கிராமங்களில் குடிப்பதற்காக மின்மோட்டார் திருட்டு, இருசக்கர வாகனம் திருட்டு உள்ளிட்ட பல்வேறு திருட்டு சம்பவங்களும் அரங்கேரி வருவதால் மதுபான கடையை உடனே அகற்ற வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

# ராமேசுவரம் அருகே கண்டறியப்பட்ட புதிய கடல் வாழ் நுண்ணுயிரிக்கு கலாம் என்று பெயர் சூட்டல்



ராமேஸ்வரம் , செப். 23–

ராமேசுவரம் அருகே மண்டபம் கடற்பகுதியில் கண்டுப்பிடிக்கப்பட்ட புதிய கடல் வாழ் நுண்ணுயிருக்கு மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

டார்டிகிரேட்ஸ் (Tardigrade) என்பது சின்னஞ்சிறிய நீர் வாழ் நுண்ணுயிர்கள் ஆகும். இதை வெறுங்கண்ணால் பார்க்க இயலாது நுண்நோக்கி உதவியுடன்தான் இதைப் பார்க்க முடியும். இவை அரைமில்லிமீட்டரிலிருந்து அதிகப்பட்சமாக ஒன்றரை மில்லி மீட்டர் வரை வளரக்கூடியது. இவற்றிற்கு 'நீர்க் கரடிகள்' என்ற பட்டப்பெயரும் உண்டு.

கேரளா மாநிலம் கொச்சியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் கடல் உயிரியல், நுண்ணுயிரியல் மற்றும் உயிர் வேதியியல் துறை தலைவர் பேரா. எஸ்.பிஜோய் நந்தன் ஆராய்ச்சி மாணவர் கே. விஷ்ணுதத்தன் ஆகிய இருவரும் புதிய வகை கடல்வாழ் டார்டிகிரேட்ஸ் நுண்ணுயிரை ராமேசுவரம் அருகே மண்டபம் கடற்பகுதியில் அண்மையில் கண்டறிந்தனர். மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நினைவாக இந்த உயிரினத்திற்கு 'பாட்டிலிப்ஸ் கலாமி' என அவர்கள் பெயர் சூட்டி உள்ளனர்.

இது குறித்து பேராசிரிய எஸ்.பிஜோய் நந்தன் கூறும்போது, "இந்திய கடல் பகுதியில் கடல்வாழ் டார்டிகிரேட்ஸ் நுண்ணுயிரை 2021ம் ஆண்டு முதன்முறையாக கேரளாவிலுள்ள வடகராவில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது இரண்டாவது முறையாக இந்தியாவின் கிழக்குகடற்கரைபகுதியான ராமேசுவரம் அருகே மண்டபம் கடற்பகுதியில் கண்டுப்பிடிக்கப் பட்டுள்ளது.

பாட்டிலிப்ஸ் கலாமி சராசரியாக 170 மைக்ரோமீட்டர்கள் (0.17 மிமீ) நீளமும், சுமார் 50 மைக்ரோமீட்டர்கள் (0.05 மிமீ) அகலமும் கொண்டது. இதன் தலை சரிவகம் போன்று உள்ளது. அதிலிருந்துநீட்டிக்கப்பட்ட கூர்மையான நுனி கொண்ட இழை போன்ற இணைப்புகள் உள்ளன. நான்கு ஜோடி கால்களும், வெவ்வேறு நீளம் கொண்ட உணர்ச்சி முதுகெலும்புகளும் இதற்கு உள்ளன. இதில் பெண் இனம் ஆண் இனத்தை விட சற்று பெரியதாக இருக்கும்.

அப்துல் கலாமின் சொந்த ஊரான ராமேசுவரவரத்திற்கு அருகில் கண்டுப்பிடிக்கப் பட்டதால் அறிவியல் மற்றும்தொழில்நுட்பத்தின் மீதான கலாமின் அர்ப்பணிப்புக்காக இந்த உயிரினத்திற்கு கலாமின் பெயரை சூட்டியுள்ளோம்" என்றார். இந்த கண்டுபிடிப்பு சூடாக்சா எனும் விலங்கியலுக்கான சர்வதேச அறிவியல் ஆய்விதழில் தற்போது வெளியாகி உள்ளது.

### சனாதன சர்ச்சைப் பேச்சு

# தமிழக அரசு, உதயநிதி ஸ்டாலின் பதிலளிக்க உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்



புதுடெல்லி , செப். 23–

சனாதன சர்ச்சைப் பேச்சு தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், சனாதன எதிர்ப்பு மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது தொடர்பாக தமிழக அரசும் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், "இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும்.

அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டியதே முதல் காரணம். எனவே, இந்த மாநாட்டுக்கு மிகப் பொருத்தமான தலைப்பு வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்" எனத் தெரிவித்திருந்தார். இது தேசிய அளவில் விவாதப் பொருளாகி பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. மேலும், பாஜக மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில், உதயநிதி ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான இந்து மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் பேசியுள்ளனர். எனவே, உதயநிதி உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சனாதன ஒழிப்பு மாநாட்டு நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உதயநிதி, சேகர்பாபு கலந்துகொண்டதை சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும். மேலும், சனாதனம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். இந்த நிகழ்ச்சி நடத்தியதன் பின்னணியில் ஏதேனும் சதி உள்ளதா என்பது குறித்து கண்டறிய சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி ஜெகநாதன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் ஏன் விசாரிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினர். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக ஏதேனும் உயர் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெறலாம் எனக்கூறி வழக்கை விசாரிக்க மறுப்பு தெரிவித்தனர்.

அப்போது மனுதாரர் நீதிபதிகள் முன்பு, கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அதுபோலத்தான் சனாதனம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியிருந்ததை சுட்டிக்காட்டி, விடாமல் கூறிக்கொண்டே இருந்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், சனாதன சர்ச்சை பேச்சு தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், சனாதன எதிர்ப்பு மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது தொடர்பாக தமிழக அரசும் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டனர்.

# "குறுவைக்கு பயிர்க் காப்பீடு வழங்க மறுப்பது நியாயமல்ல; சம்பா இழப்பீடும் போதாது" அன்புமணி



சென்னை , செப். 23–

குறுவை நெற்பயிர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை தமிழக அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றும், சம்பா பயிர்களுக்கு இழப்பீடாக ஏக்கருக்கு ரூ.8,000 மட்டுமே கிடைக்கும் வகையில் தமிழக அரசு அறிவித்திருப்பது போதுமானது அல்ல என்றும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடப்பாண்டிலும் குறுவை நெற்பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு வழங்கப்படவில்லை. காவிரியில் போதிய அளவு தண்ணீர் திறந்து விடப்படாததால், மூன்றரை லட்சம் ஏக்கருக்கும் கூடுதலான பரப்பளவில் குறுவை நெற்பயிர்கள் வாடுகின்றன. அவற்றில் இரண்டு லட்சத்திற்கும் கூடுதலான பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களைக் காப்பாற்றவே முடியாது என்று உழவர்கள் கவலை தெரிவித்துள்ள நிலையில், அவற்றுக்கான இழப்பீட்டை பெறுவதற்கான வாய்ப்பு பயிர்க் காப்பீடு மூலம் உழவர்களுக்கு ஏற்படுத்தித் தரப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் 2021–ஆம் ஆண்டு வரை குறுவை நெற்பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு வழங்கப்பட்டு வந்தது. இப்போதும் தமிழகத்தில் நெல் தவிர்த்து மக்காச்சோளம், உளுந்து, துவரை, பச்சைப் பயறு, சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை, எள், கொள்ளு, பருத்தி, சாமை, வாழை, மரவள்ளி, வெங்காயம், உருளைக்கிழங்கு, மஞ்சள், சிவப்பு மிளகாய், தக்காளி, வெண்டை, கத்திரி, முட்டைகோஸ், கேரட், பூண்டு, இஞ்சி போன்ற பிற குறுவை பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது. குறுவை நெற்பயிர்களுக்கும் காப்பீடு வழங்கத் தயாராக இருப்பதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், தமிழக அரசு தான் பயிர்க் காப்பீடு வழங்க மறுத்து வருகிறது. இது நியாயமல்ல.

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழக அரசுக்கு உள்ள நெருக்கடியை புரிந்துகொள்ள முடிகிறது. ஒருபுறம் இத்திட்டத்திற்கான பங்களிப்பை மத்திய அரசு 49 விழுக்காட்டில் இருந்து 25–30% என்ற அளவுக்கு குறைத்து விட்டது. மற்றொருபுறம் கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டின் அளவு அதிகரித்து விட்டதால் காப்பீட்டுக்கான பிரீமியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று காப்பீட்டு நிறுவனங்கள் நெருக்கடி அளிக்கின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டே நெற்பயிருக்கான காப்பீட்டை தமிழக அரசு மறுக்கிறது. ஆனால், அதன் பாதிப்பை விவசாயிகள் தான் அனுபவித்து வருகின்றனர்.

பயிர்க் காப்பீடு செய்யப்படவில்லை என்றாலும்கூட, குறுவைப் பருவ நெற்பயிருக்கு பாதிப்பு ஏற்பட்டால் மாநிலப் பேரிடர் நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மூலம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படும் நெல் விவசாயிக்கு பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் இழப்பீட்டுடன் ஒப்பிடும்போது, பேரிடர் நிதியிலிருந்து வழங்கப்படும் இழப்பீடு மிக மிக குறைவாகும். பயிர்க் காப்பீடு செய்யப்பட்டால் ஏக்கருக்கு ரூ.30,000 வரை காப்பீடு கிடைக்கும். ஆனால், தமிழக அரசு அதிக அளவாக ரூ.5000 மட்டுமே நிவாரணம் வழங்கும். அத்தொகை இடுபொருள் செலவுக்குக் கூட ஈடாகாது.

தமிழ்நாட்டில் நடப்பு குறுவை பருவத்தில் குறைந்தது 2 லட்சம் ஏக்கரில் நெற்பயிர்கள் முற்றிலுமாக பாதிக்கப்படும். ஒன்றரை லட்சம் ஏக்கரில் குறிப்பிடத்தக்க அளவில் பாதிப்புகள் ஏற்படக்கூடும். ஒரு ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய ரூ.25,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஏக்கருக்கு ரூ.30 ஆயிரமாவது இழப்பீடு வழங்கப்பட்டால் தான் உழவர்கள் அதிக பாதிப்பு இல்லாமல் தப்பிக்க முடியும். அதற்கு குறுவை நெற்பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதைக் கருத்தில் கொண்டு குறுவை நெற்பயிர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை தமிழக அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும். குறுவை பயிர்களுக்கான காப்பீட்டுத் தேதி ஏற்கெனவே முடிவடைந்து விட்ட நிலையில், நடப்பாண்டை சிறப்பு நேர்வாக கருதி இம்மாத இறுதி வரை காப்பீட்டை பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்றொருபுறம் 2022–23 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சம்பா பயிர்களுக்கு இழப்பீடாக ரூ.560 கோடி காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக வழங்கப்படும் என்றும் தமிழக முதல்வர் நேற்று அறிவித்திருக்கிறார். 7 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு ரூ.560 கோடி என்றால், ஏக்கருக்கு ரூ.8,000 மட்டுமே கிடைக்கும். இது போதுமானதல்ல. பயிர்க் காப்பீட்டு நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி ஏக்கருக்கு குறைந்தது ரூ.30 ஆயிரமாவது காப்பீடு பெற்றுத்தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அன்புமணி தெரிவித்துள்ளார்.

# சீர்காழியில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்

சீர்காழி, செப்,23

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சி மற்றும் விவேகானந்தா மகளிர் கல்லூரி சார்பில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



பேரணிக்கு நகராட்சி ஆணையர் ஹேமலதா தலைமை தாங்கினார். விவேகானந்தா கல்வி நிறுவனங்களின்தாளாளர் ராதாகிருஷ்ணன், இயக்குனர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் சுகந்தி வரவேற்பு பேசினார்.

டெங்கு விழிப்புணர்வு பேரணியை நகரமன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகரன் கொடி அசைத்து தொடங்கி வைத்து பேசினார். தொடர்ந்து டெங்கு விழிப்புணர்வு பேரணி பழைய பேருந்து நிலையம், பிடாரி தெற்கு வீதி, கச்சேரி ரோடு, வழியாக புதிய பேருந்து நிலையத்தை வந்தடைந்தது.

பேரணையில் டெங்கு பற்றிய விழிப்புணர்வு அடங்கிய பதாகைகளை கல்லூரி மாணவிகள் கையில் ஏந்தி முழக்கமிட்டு சென்றனர். பேரணியில் நகர அமைப்பு ஆய்வாளர் மரகதம், மேலாளர் லதா, நகராட்சி களப்பணி மேற்பார்வையாளர் சீதாலட்சுமி, கல்லூரி துணை முதல்வர்கள், போக்குவரத்து போலீசார், நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், கல்லூரி மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மத்திய அரசின் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் காரைக்கால் மாவட்டத்தில் காசநோயாள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் ஆரோக்கிய ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய பையை நேற்று காலை ஆட்சியர் வலாகத்தில் சுமார் 94 காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் வழங்கப்பட்டது. இந்த ஊட்டச்சத்து பொருட்களை காரைக்கால் ஓ.என். ஜி.சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நலவழித்துறை துணை இயக்குனர் டாகடர். சிவராஜ்குமார் நோய் தடுப்பு ஒருங்கிணைப்பாளார் டாக்டர். தேனாம்பிகை காசநோய் மருத்துவர் டாக்டர். கோகுல் கலந்து கொண்டனர்.

# தூய்மையான, பசுமையான காரைக்காலை வலியுறுத்தி, தூய்மைப்பணியாளர்கள் பங்கேற்ற ரங்கோலிப் போட்டிகள்

காரைக்கால் , செப். 23–

தூய்மையான,பசுமையான காரைக்காலை வலியுறுத்தி, தூய்மைப்பணியாளர்கள் பங்கேற்ற ரங்கோலிப் போட்டிகள் நடைபெற்றன மகாத்மா காந்தி பிறந்த தினத்தை முன்னிட்டு இரண்டு வார காலம் நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் தூய்மை பணியில் ஈடுபடுதல், மக்களுக்கிடையே தூய்மை குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்ட நிர்வாகம் காரைக்கால் நகராட்சி நிர்வாகம் மற்றும் எச்.ஆர். ஸ்கொயர் நிறுவனமும் இணைந்து தூய்மை மற்றும் பசுமை குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.



வீடுகள். நிறுவனங்களில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் எச்.ஆர். ஸ்கொயர் நிறுவன தொழிலாளர்கள் பங்கேற்ற ரங்கோலிப் போட்டி நடைபெற்றது.

நகராட்சி ஆணையர் திருமதி.சத்யா போட்டியை தொடங்கிவைத்தார். தூய்மை மற்றும் பசுமையை வலியு றுத்தும் விதமாக இப்போட்டியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். ஒரு குழுவுக்கு 4 பேர் வீதம் 30 குழுக்கள் இப்போட்டியில் பங்கேற்றன.

எச். ஆர். ஸ்கொயர் நிறுவன முதன்மை ஆபரேட்டிங் அலுவலர் வி. நரேந்திரன் உள்ளிட்ட நகராட்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர். போட்டியில் சிறந்த ரங்கோலி தேர்வு செய்யப்பட்டு அக். 2-ஆம்தேதிபரிசுவழங்கப்படும் என நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர். ஹெச் ஆர் ஸ்கொயர் நிறுவனத்தைச் சேர்ந்த வெங்கட்ராமன் மற்றும் உதயபாஸ்கர் உடன் இருந்தனர்.

## அக்கரப்பாக்கம்-திருக்கண்டலம் ஊராட்சிகளில்

# கலைஞரின் நூற்றாண்டு விழா தெருமுனை பிரச்சார கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



ஊத்துக்கோட்டை, செப்23–

திருவள்ளூர் மாவட்டம்,எல்லாபுரம் ஒன்றியம், அக்கரப்பாக்கம்-திருக்கண்டலம் ஊராட்சிகளில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் தெருமுனை பிரச்சார கூட்டம் மற்றும் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு, எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆ.சத்தியவேலு தலைமை தாங்கினார். பி.வெங்கடாஜலபதி,ஏ. தேவேந்திரன், டி. கே.முனி வேல்,கே. வி.வெங்கடாசலம், இ.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், கழகப் பிரச்சார குழு செயலாளரும்,தலைமை கழக பேச்சாளருமான சேலம் சுஜாதா,மாநில அயலாக அணி துணைச் செயலாளர் ஜி.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு கலைஞரின் நூற்றாண்டு விழாவை தமிழக மக்கள் கொண்டாட அவர் கொண்டு வந்த திட்டங்களே என்று எடுத்துக்கூறி சிறப்புரை ஆற்றி பேசினர்.பின்னர், திருக்கண்டலம் கிராமத்தில் 500 பெண்களுக்குஎவர்சில்வர் தூக்கும்,அக்கரப்பாக்கம் கிராமத்தில் 500 பெண்களுக்கு சேலையும் என மொத்தம் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

முன்னதாக அனைவரையும் எம். செந்தமிழ்ரசன், எம் முனி நாதன், அக்கரை ஆர்.ரஞ்சித், எஸ். சந்திரசேகரன், எஸ். கோட்டையன், நளினி மணிகண்டன், கே.எஸ். குப்பன், பி.மதன் என்ற சத்யராஜ், ஜி.தியாகராஜன்,எம். கே. ஆனந்தன், கே. லிங்கதுரை ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். முடிவில், சி.தினேஷ்குமார், எஸ்.சாம்கமலேசன், ஏ.இளைரசு ஆகியோர் நன்றி கூறினர். இந்நிகழ்ச்சியில், ஏனம்பாக்கம் சம்பத், கொள்கை டி,பாபு,சுரேஷ் என்றசீனு மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர,பேரூர்,கிளை கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




காரைக்கால் மாவட்டம் செருமா விலங்கையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் நேற்று 17–ஆவது (பிடெக்) பொறியியல் முதலாமாண்டு வகுப்புகள் துவங்கப்பட்டன. இந்நிகழ்வில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவா தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் பொறையாறு கல்லூரியைச் சேர்ந்த முதல்வர் ஜான்சன் ஜெயராஜ் இக்கல்லூரியின் முதல்வர் ஆராமுதன் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள் இன்றைய நிகழ்வில் 180 இடங்களுக்கு 125 மாணவ மாணவிகள் இந்த 17 வது பேச்சில் சேர்ந்துள்ளார்கள் என்றும மீதமுள்ள மாணவர்கள் இன்னும் சில நாட்களில் சேருவார்கள் என்றும் வரும் திங்கள்கிழமை முதல் முதலாமாண்டு வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் எனவும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது. முனைவர் மணிகண்டன் நன்றியுரை கூறினார்

# சீர்காழியில் தனியார் வங்கியில் திடீர் தீ விபத்து, ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் வெளியே ஓடியதால் அசம்பாவிதம் தவிர்ப்பு

சீர்காழி, செப். 23–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகே சட்டநாதர் காலனியில் செயல்பட்டு வரும் சி.எஸ்.பி தனியார் வங்கி வழக்கம் போல காலை 9 மணியளவில் திறந்து செயல் பட தொடங்கி உள்ளது.

வங்கியில் சுமார் 11 மணி அளவில் திடிர்னு இன்வெட்டர் பேட்டரிகள் வைத்துள்ள அறையில் இருந்து பேட்டரிகள் தீ பற்றி மளமளவென்று எரிய தொடங்கியது. வங்கி முழுவதுமாக கரும் புகை சூழ்ந்தது. அதனை தொடர்ந்து




வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அலறி கொண்டு வெளி ஓடி வந்தனர்.

பின்னர் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீ மேலும் பரவாமல் தண்ணீர் அடித்து தீயை அணைத்தனர். இதுகுறித்து சீர்காழி போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்

# திருப்பூர் மாநகராட்சியில் இடிந்து விழும் அபாயத்தில் அங்கன்வாடி மையம் பெற்றோர் அச்சம்

திருப்பூர் , செப். 23–

திருப்பூர் மாநகராட்சி 4-வது வார்டுக்குட்பட்ட பூலுவபட்டி அரசுப் பள்ளியை ஒட்டி, அங்கன்வாடி குழந்தைகள் மையம் செயல்பட்டு வருகிறது. இதில், 30–க்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். கடந்த 2011–ம் ஆண்டு அங்கன்வாடி கட்டிடம் கட்டப்பட்டது. தற்போது கட்டிடத்தின் மேற்கூரை சிதிலமடைந்து, இடிந்துவிழும் அபாய நிலையில் உள்ளது. குறிப்பாக, மழைக் காலங்களில் குழந்தைகளை அச்சத்துடன் அனுப்பும் சூழ்நிலையில் பெற்றோர் உள்ளனர்.

ஏற்கெனவே, கடந்த காலங்களில் மழைபெய்தபோது மேற்கூரை சேதமடைந்தது. தொடர்ந்து அந்த சேதத்தை சரி செய்யாமல்விட்டதால், தற்போது குழந்தைகள் பகலில் தங்கி பயிலும் அறையின் மேற்கூரை இடிந்துவிழும் அபாயத்தில் உள்ளது. அதேபோல, அங்கன்வாடி நுழைவுவாயில் மேற்கூரையும் சிதிலமடைந்துள்ளது.

இதுதொடர்பாக குழந்தைகளின் பெற்றோர் கூறும்போது, “இங்கு விக்னேஷ்வரா நகர் மற்றும் பூலுவபட்டி பகுதியை சேர்ந்த குழந்தைகள் படிக்கின்றனர். கட்டிடம் சீரமைக்கப்படாததால், குழந்தைகளை அச்சத்துடன் அனுப்பும் நிலைதான்உள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பு, புதுக்கோட்டை மாவட்டத்தில் அங்கன்வாடி கட்டிடம் சேதமடைந்து 2 குழந்தைகள்



படுகாயமடைந்தனர். அதன்பின், இந்த அங்கன்வாடியை பார்க்கும்போதெல்லாம் அச்சத்துடன் இருக்க வேண்டியுள்ளது.

அதேபோல, அருகில் மாநகராட்சி நிர்வாகம், கால்நடை மருத்துவமனையை ஒட்டிய பகுதியில் குப்பை கொட்டுவதால், இந்த பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது. ஈக்களின் தொந்தரவால், அங்கன்வாடியில் குழந்தைகள் சுகாதாரமான உணவு உண்கிறார்களா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு கோரிக்கைகள் வைத்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதேபோல, வளாகத்தில் முட்செடிகளை குவித்து வைத்திருப்பதால், பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துக்கள் இருக்குமோ என்ற அச்சமும் எழுகிறது. அங்கன்வாடி வளாகத்தை சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும் என்பது எங்கள் அனைவரின் எதிர்பார்ப்பு. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் கள ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

# ஆக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளி 167 மாணவர்களுக்கு மிதிவண்டிகளை எம்.எல்.ஏ.நிவேதா முருகன் வழங்கினார்



செம்பனார்கோவில், செப்– 23:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஒன்றியம் ஆக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி பள்ளி தலைமை ஆசிரியர் திருஞானசம்பந்தம் தலைமையில்நடைபெற்றது. செம்பனார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர் முன்னில வகித்தார். ஆக்கூர் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன் வரவேற்று பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் பங்கேற்று தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை மாணவ மாணவிகளிடம் விளக்கி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, 167 மாணவர் மற்றும் மாணவிகளுக்கு இலவச மிதிவண்டியினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட திமுகதுணைச்செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோவில்திமுக ஒன்றிய செயலாளர்கள் அமுர்த.விஜயகுமார், எம். அப்துல்மாலிக், பி.எம். அன்பழகன், ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தி வேல்முருகன், கண்ணன் அரசு உதவி பெறும் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஷாஜகான், பள்ளி தாளாளர் இக்ராம் ரசூல் மற்றும் ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள், ஊராட்சி பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# லிட்டரசி இந்தியா டிரஸ்ட் மற்றும் ஓர்ல்டு டிரஸ்ட் இணைந்து தேர்வாய் கண்டிகையில் முதியோர் கல்வி மையத்தை துவக்கி வைத்தனர்

ஊத்துக்கோட்டை, செப்23–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், தேர்வாய் ஊராட்சியில் உள்ள தேர்வாய் கண்டிகை கிராமத்தில் லிட்ரெசி இந்தியா டிரஸ்ட் மற்றும் ஓர்ல்டு டிரஸ்ட் இணைந்து முதியோர் கல்வி மையத்தை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு, லிட்டரசிஇந்தியாடிரஸ்ட் முதியோர் கல்வித் திட்ட அலுவலர் உதயகுமார் தலைமை தாங்கினார். டாக்டர் பி.ஜெயஸ்ரீ,ஆர். நவீன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேர்வாய் ஊராட்சிமன்ற தலைவர் எம். முனிவேல், வார்டு உறுப்பினர் ஸ்டெல்லாமேரி குமார் ஆகியோர் 25 மையங்களுக்கான முதியோர் கல்வி மையத்தை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து வாழ்த்தி பேசினர்.

இதில், தமிழ்நாடு மாநில ஊரகவாழ்வாதார இயக்க வட்டார ஒருங்கிணைப்பாளர் ஏ.நாகராஜ்,பூண்டி ஒன்றிய முதியோர் கல்வி திட்ட அலுவலர் டி.இளங்கோ, சிதஞ்சேரி சமூக ஆர்வலர் எம்.சத்தியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். முதியோர் கல்வி மையத்துக்கு தேவையான உபகரணங்களை எஸ். தெய்வநிலா,கே.கல்பனா ஆகியோர் வழங்கினர்.

முன்னதாக அனைவரையும் ஆசிரியர்கள் எஸ். தேன்மொழி, எம். நிஷா ஆகியோர் வரவேற்றனர்.முடிவில், என்.கோவர்தனன் நன்றி கூறினார்.இதில், பொன்.பரசுராமன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கி விவசாயிகள் கூட்டம் மாவட்ட ஆட்சி தலைவர் மா.சௌ. சங்கீதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# சந்திரபாபு கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆந்திர சட்டசபையில் விசில் அடித்து அமளியில் ஈடுபட்ட பாலகிருஷ்ணா

அமராவதி , செப். 23–

ஆந்திரசட்டசபையில் தெலுங்கு நடிகரும், தெலுங்கு தேசம் கட்சி எம்எல்ஏ-வுமான நந்தமுரி பாலகிருஷ்ணா விசில் அடித்து அமளியில் ஈடுபட்டார்.

ஆந்திராவில் கடந்த 2018-ம் ஆண்டு, திறன் மேம்பாட்டு கழகத்தில் ரூ.371 கோடி கைமாறியதில் ஊழல் நடந்ததாக சந்திரபாபு நாயுடு கடந்த சில தினங்களுக்கு முன்பு சிஐடி போலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் சுமார் 10 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரை 14 நாட்கள்



நீதிமன்றக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. தற்போது அவர் ராஜமுந்திரி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீதான கைது நடவடிக்கையைக் கண்டித்து தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர்கள் ஆந்திர மாநிலத்தில் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அம்மாநில சட்டப்பேரவையிலும் இது எதிரொலித்தது. சட்டப்பேரவைக்கு வந்த தெலுங்கு தேசம் கட்சி எம்எல்ஏக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். அப்போது இந்துபுரம் தொகுதி எம்எல்ஏவும் நடிகருமான நந்தமுரி பாலகிருஷ்ணா, ஆந்திர நீர்வளத்துறை அமைச்சர் அம்பதி ராம்பாபுவை நோக்கி தனது படங்களில் வருவது போல தொடைகளை தட்டியும், மீசையை முறுக்கியும் சவால்விடும் வகையில் சைகை செய்தார்.

பாலகிருஷ்ணாவின் இந்த செயலை கண்டித்த சபாநாயகர் தம்மினேனி சீதாராம், “இதை பாலகிருஷ்ணாவின் முதல் தவறாக கருதி அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அவையின் விதிமுறைகளை மீறி உறுப்பினர் யாரேனும் அநாகரிகமாக நடந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று தெரிவித்தார்.

இந்தநிலையில்,நேற்று சட்டப்பேரவையில் தெலுங்கு தேசம் உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இந்த முறை கையோடு விசில் ஒன்றைக் கொண்டு வந்த பாலகிருஷ்ணா, அந்த விசிலை ஊதி தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

### தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு வருகை தரும்

# அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும்: எம்எல்ஏ ராஜா

சங்கரன்கோவில். செப்.23-.

தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ விடுத்துள்ள அறிக்கையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தென்காசி மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை புரிகிறார். தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் சின்னகோவிலான்குளம் கிராமத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையத்தை துவக்கி வைக்க காலை 11:30 மணிக்கு வர உள்ளார்.

வெள்ளாட்டின ஆராய்ச்சி மையத்தை துவக்கிவைக்கவருகைதரும் அமைச்சருக்கு தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் நெல்லை சாலை சண்முகநல்லூர் விலக்கில் காலை 11.00 மணிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகின்றது. இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர், கிளை கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் கழகத்தினர் அனைவரும் பங்கேற்று அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தேர்தல் பணி குழு கூட்டம்



அரியலூர்,செப்.23-

அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தேர்தல் பணி குழு கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் வெங்கடேஸ்வரா ஹோட்டல் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற, விடுதலை சிறுத்தைகள் கட்சியின், அரியலூர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்ற, பாராளுமன்றத் தேர்தல் பணி குழு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திற்கு, அக்கட்சியின் அரியலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அங்கனூர் சிவக்குமார் தலைமை வகித்தார், கட்சியின் அரியலூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் மதி என்கிற மதியழகன் வரவேற்றுப் பேசினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் விடுதலை செழியன், மாநில நிர்வாகி பாவரசு ஆகியோர் பேசினார்கள், கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செந்துறை, திருமானூர், அரியலூர் வட்டார நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், பொற்பனைக்கோட்டையில், தொல்லியல் அகழாய்வுப் பணியினை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தொல்லியல்துறை உதவி இயக்குநர் (பொ) தங்கதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சாதி வாரியாக கணக்கெடுப்பு திசையில் நான் திரும்ப மாட்டேன்

# முயற்சியே பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா ராகுல் காந்தி விமர்சனம்



புதுடெல்லி ,செப்.23-

பெண்கள் இட ஒதுக்கீடு ர சி து மரணதண்டனை காங்கிரஸ் வரவேற்கிறோம் ஆனால் இது சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு கோரிக்கை ஒரு கவனச்சிதறல் முயற்சி அங்கு உள்ளது மற்றும் அந்த கூறுவது " அது இருக்க வேண்டும் " . காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி என்றார் .

தலைநகர் டெல்லியில் காங்கிரஸ் கட்சி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்கள் கூட்டத்தில் கலக்கவும் கொண்டா ராகுல் காந்தி , " பெண்கள் இட ஒதுக்கீடு ர சி து மரணதண்டனை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறோம் ஆனால் இது சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு கோரிக்கை ஒரு கவனச்சிதறல் முயற்சி அது அங்கே இருக்கிறது . அதில் உள்ளது இரண்டு விஷயங்கள் நாங்கள் இருக்கிறோம் சுட்டிக்காட்ட நாங்கள் விரும்புகிறோம் ஒன்று பெண்கள் இட ஒதுக்கீடு சட்டம் செயல்படுத்த வேண்டும் முன் ஓபிசி இட ஒதுக்கீடு அர்ப்பணிப்பு செய் கூட சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு கட்டுப்பாட்டில் வேண்டும் இரண்டாவது தொகுதி மற்றும் மறுவரையறை முடிந்தது முடித்திருக்க வேண்டும் வேண்டும் ஆனாலும் இவை செய்யவில்லை.

இப்போது இவற்றுக்கு எல்லாம் காத்திருக்காமல் பிரதமர் நரேந்திரன் மோடி பெண்கள் இட ஒதுக்கீடு சட்டம் பயிற்சி செய்ய நாம் கொண்டு வர முடியும் பேச , ஒரு இட ஒதுக்கீடு சட்டம் இன்று மட்டும் ஒன்றாக செயல்படுத்த முடியும் அவ்வளவுதான் ஒன்றுமில்லை அவ்வளவுதான் சிக்கலான விஷயம் இல்லை ஆனால் , இங்கே அரசாங்கம் அந்த செய்கிறது அந்த தெரியவில்லை ஏன் தூண்டுதல் சட்டம் நிறைவேறாவிட்டாலும் போகலாம் மக்களின் முன்னால் தூண்டுதல் சட்டம் இப்போது காட்டிக்கொடுத்தார் பின்னர் 10 ஆண்டுகள் மேலும் இது செய்ய முடியும்

2010 இல் பாராளுமன்றத்தில் பெண்கள் இட ஒதுக்கீடு ர சி து கொண்டு வந்தவுடன் அதில் உள்ளது ஓபிசி உள் ஒதுக்கீடு காங்கிரஸால் கொண்டு வரவில்லை பரிதாபம் தான் . ஆனால் நாங்கள் இருக்கிறோம் மீண்டும் ஆள அது வரும்போது நிச்சயமாக சாதி வாரியாக கணக்கெடுப்பு நடத்துவோம் பிரதமர் நரேந்திரன் மோடி தன்னை என்றென்றும் அ ஓபிசி தலைவர் அந்த அடையாளம் எடுக்கும் ஆனாலும் ஓபிசிக்கள் , ஆதிவாசிகள் , முதலியன சேர்ந்தார் அதிகாரிகள் உயர் மட்டத்தில் எத்தனை யாரோ அந்த குறுக்கு விரல்கள் நீங்கள் எண்ணினால் இது ஒரு நகர்த்துபவர் . பா.ஜ.க எம்.பி , தயவுசெய்து வெறும் சிலைகள் மட்டுமே . அவர்களுக்காக சட்டம் கலவையில் தனிப்பட்ட அதிகாரம் ஒன்றுமில்லை இல்லை. இந்தியன் மக்கள் அனைவருக்கும் சமமாக அதிகாரம் விநியோகம் அது முதலில் அடிமை இருக்கும் சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு கொடுப்பார் புள்ளிவிவரங்கள் மக்களுக்கு அதிகாரம் விநியோகத்திற்காக உதவும் ராகுல் காந்தி கூறினார்.

முன்னதாக , மக்களவையில் நடந்தது விவாதத்தின் போது காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி பேசுகையில் , " பெண்கள் இட ஒதுக்கீடு ர சி து இருக்கிறது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கனவு இந்தா ர சி து காங்கிரஸ் சார்பில் நான் ஆதரிக்கிறேன் ர சி து தாமதமின்றி சீக்கிரம் நடைமுறைக்கு கொண்டுவா வேண்டும் சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு தலித் , பழங்குடியினர் பெண்களுக்காக உள் இட ஒதுக்கீடு கொடுப்பதற்கு வேண்டும் ஓபிசி அனைவருக்கும் உள் ஒதுக்கீடு வழங்குகின்றன "வேண்டும் " . அவர் பேசினார்

திரிணாமுல் காங்கிரஸ் , திமுக , தேசியவாதிகள் காங்கிரஸ் , ஐக்கிய ஜனதா மேடை , இடதுசாரிகள் , சமாஜ்வாதி உட்பட அனைத்து கட்சி மற்றும் உறுப்பினர்கள் ர சி து கொண்டு அவர்கள் பேசுகிறார்கள் ஓபிசி சிலருக்கு உள் ஒதுக்கீடு வழங்குகின்றன வேண்டும் இருக்கிறது பெரும்பாலானவை உறுப்பினர்கள் அவர்கள் வலியுறுத்துகின்றனர் இருக்கிறது குறிப்பிடத்தக்கது.

# கறம்பக்குடியில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் விநாயகர் சிலை ஊர்வலம்



கறம்பக்குடி,செப்.23-

கறம்பக்குடியில் 600க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்போடு நடைபெற்ற விநாயகர் சிலை ஊர்வலம், பட்டாசுகள் வெடித்து தாரை தப்பட்டைகள் முழங்க கரகாட்டம் திருநங்கைகளின் காளி கருப்பர் ஆட்டம் ஆகியவை பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்த நிலையில் எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி அக்னி ஆற்றில் விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டது.

கடந்த 18ம் தேதி விநாயகர் சதுர்த்தி விழா நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது, புதுக்கோட்டை மாவட்டத்திலும் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்ட நிலையில் மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் விநாயகர் சிலை வைக்கப்பட்டு பொதுமக்கள் வழிபட்டு வந்தனர். இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நீர் நிலைகளில் கரைக்கப்பட்ட நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பதட்டமான பகுதியாக கருதப்படும் கறம்பக்குடியில் விநாயகர் சிலைகளின் ஊர்வலம் 600க்கும் மேற்பட்ட போலீசாரின் பலத்த பாதுகாப்போடு நடைபெற்றது. இதில் சீனிகடை முக்கம், பேருந்து நிலையம், சடையன் தெரு, கணக்கர் தெரு, தெற்கு யாதவர் தெரு, நரங்கிப்பட்டு கள்ளர் தெரு, நரங்கிப்பட்டு கோனார் தெரு, சுக்கிரன்விடுதி ஆகிய 9 இடங்களில் வைக்கப்பட்ட 9 விநாயகர் சிலைகள் பல்வேறு வாகனங்கள் மூலம் சீனிக்கடை முக்கத்திற்கு எடுத்து வரப்பட்டு பின்னர் பட்டாசுகள் வெடித்து தாரை தப்பட்டைகள் முழங்க விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த விநாயகர் சிலை ஊர்வலத்தின் போது கரகாட்டம், திருநங்கைகளின் காலி கருப்பர் ஆட்டம் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது, இந்த ஊர்வலமானது சீனிக்கடை முக்கத்தில் தொடங்கி திருவோணம் சாலை, தட்டாவூரனி சாலை, தட்டாரத்தெரு, பள்ளிவாசல் தெரு, பேருந்து நிலையம், கச்சேரி வீதி, புதுக்கோட்டை சாலை வழியாக சென்று திருமணஞ்சேரி அக்னி ஆற்றில் எந்தவித அசம்பாவிதமும் இன்றி விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டன. மேலும் காவல்துறையினர் அசம்பாவிதங்களை தவிர்க்க விநாயகர் சிலை அமைக்கப்பட்ட இடங்களில் சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் அமைத்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில் விநாயகர் சிலைகளில் ஊர்வலத்திலும் ஆங்காங்கே காவல்துறையினர் வீடியோ பதிவும் செய்து நடவடிக்கையும் மேற்கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் எம்.ஆர் கல்லூரியில் நிறுவனர் நினைவு நாள் போட்டிகள்

# பரிசுத்தொகை ஒரு இலட்சம் ரூபாய் மாநில அளவில் மாணவ மாணவிகள் பங்கேற்க அழைப்பு

அரியலூர்,செப்.23-

அரியலூர் மாவட்டம், தத்தனூர் எம்.ஆர் கல்லூரியில், நிறுவனர் நினைவு நாள் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு, ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது. இது பற்றி கல்விநிறுவனங்களின் தாளாளர், எம் ஆர் ரகுநாதன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்கா, தத்தனூர் மீனாட்சிராமசாமி கல்வி நிறுவன வளாகத்தில், மாநில அளவிலான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான, கவிதை, கட்டுரை , பேச்சுப் போட்டிகள் நடைபெறுகின்றது. மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் எம். ராமசாமி முதலியார் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற உள்ள இப்போட்டிகளில், மாநில அளவிலான பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்ளலாம்.

போட்டிகள் 07.10.2023 அன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது

போட்டிக்கான தலைப்புகளாக சுற்றுச் சூழலை பாதுகாப்போம், உங்களுக்கு பிடித்த அறிவியல் அறிஞர் என்று கொடுக்கப்பட்டுள்ளது, பேச்சுப்போட்டியில் கலந்துகொள்பவர்கள், மேற்கண்ட இரண்டு தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில், 5 நிமிடங்கள் முதல் 10 நிமிடங்களுக்கு மிகாமல் பேசுதல் வேண்டும் .

கவிதை வாசிப்பவர்கள், 75 முதல் 150 வார்த்தைகளுக்கு மிகாமல், கவிதை வாசித்தல் வேண்டும். அதே கவிதையை எழுத்துப்பூர்வமாகவும் கொடுக்கவேண்டும், கட்டுரை 500 முதல் 600 வார்த்தைகளுக்கு மிகாமல், பார்க்காமல் எழுதவேண்டும். எழுதுவதற்கு தாள் மற்றும் பேனா வழங்கப்படும்.

போட்டிகள் 6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தனியாகவும், 9,10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தனியாகவும், 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தனியாகவும் என, மூன்று நிலைகளில் தனித்தனியே நடத்தப்பட்டு, தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே முதல் பரிசு ரூபாய் 1000, இரண்டாவது பரிசு ரூபாய் 750, மூன்றாவது பரிசு ரூபாய் 500 ஆகியனவாகும்.

இலவச முன்பதிவு செய்ய கடைசி நாள் : 02.10.2023.க்குள் முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டும், மதிய உணவு இலவசமாக வழக்கப்படும். மேலும் விபரங்களுக்கு, கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். தொடர்புக்கு :9787060852, 8098989146, 8903563645.

# இடைநின்ற மாணவர்களுக்கு கைகொடுக்கும் ‘ஆபரேஷன் ரீபூட்’ கோவையில் செயல்படுவது எப்படி?





கோவை ,செப்.23-

அனைத்து செல்வங்களையும் விட மேன்மையானது கல்வி. ஏனைய செல்வங்கள் எப்போது வேண்டுமானாலும் நம்மை விட்டு போகலாம். ஆனால், கல்விச் செல்வம் அழிவில்லாத செல்வமாக இருக்கிறது. கல்வி கற்பதற்கு வயது தடையில்லை. ஆனால், பள்ளிக்குச் சென்று படிக்கவேண்டிய வயதில் பல்வேறு காரணங்களால் சிலர் அதை தவறவிடுகின்றனர்.

குறிப்பாக, 6 வயது முதல் 14 வயது வரையிலான ஆண், பெண் குழந்தைகள் கல்வி பெறுவது அடிப்படை உரிமையாகும். குடும்ப சூழல், வறுமை, கண்காணிப்பு இல்லாதது போன்ற பல்வேறு காரணங்களால் சிறார்களில் குறிப்பிட்ட சதவீதம் பேர் உரிய வயதில் பள்ளிக்கு செல்லாமல் இருப்பதாகவும், பள்ளியில் இருந்து இடைநின்று விடுவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இடைநின்றவர்களில் குறிப்பிட்ட சதவீதம் பேர் தவறான நபர்களுடன் நட்பு ஏற்பட்டு குற்றச் செயல்களில் ஈடுபடும் அளவுக்கு வாழ்க்கையில் திசைமாறிச் சென்று விடுகின்றனர். இவ்வாறு சிறார் குற்றவாளிகள் உருவாவதைத் தடுக்கவும், இடைநின்ற மாணவர்களுக்கு மீண்டும் கல்வியறிவை புகுத்துவதற்காகவும் கோவை மாநகர காவல்துறையினர் சார்பில், இடைநின்ற மாணவர்களை கண்டறிந்து மீண்டும் பள்ளிகளில் சேர்க்கும் பணியை செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக கோவை மாநகர காவல் அதிகாரிகள் கூறும்போது, ‘‘காவல் ஆணையர் வே.பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில், ‘ஆபரேஷன் ரீ பூட்’ என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிகளில் படித்து இடைநின்ற மாணவ, மாணவிகளை கண்டறிந்து அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதுஇத்திட்டமாகும்.

‘போலீஸ் அக்கா’ திட்டத்தில் உள்ள காவலர்கள், பெண்கள், சிறார்களுக்கான உதவி மைய காவலர்கள், குழந்தைகள் நலப்பிரிவு காவலர்கள் ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கல்வித்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து, தங்கள் காவல் எல்லைக்கு உட்பட்ட பள்ளிகளுக்குச் சென்று தலைமை ஆசிரியர்களை சந்தித்து இடைநின்ற மாணவ, மாணவிகளின் விவரங்களை பெறுவர்.

பின்னர், அந்த மாணவ, மாணவிகளின் பெற்றோரை சந்தித்து, எந்த காரணத்தால் பள்ளிப் படிப்பை கைவிட்டு அவர்கள் விலகவேண்டிய சூழல் வந்தது என விசாரிப்பர். தொடர்ந்து, கல்வி கற்பதால் கிடைக்கும் பலன்கள், கல்வியின் முக்கியத்துவம் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைப்பர். அதனடிப்படையில் இடைநின்ற மாணவ, மாணவிகள் பலர் மீண்டும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்” என்றனர்.


மேலும் அவர்கள் கூறும்போது,“கோவையில் உள்ள தனியார் மற்றும் அரசுப் பள்ளிகள் என 286 பள்ளிகளில் மொத்தம் 894 பேர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி இடைநின்றது தெரியவந்தது. இவர்களில் 226 சிறார்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடினோம். அதனடிப்படையில், நடப்புக் கல்வியாண்டில் 83 மாணவிகள், 90 மாணவர்கள் என 173 பேர் மீண்டும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளும் உள்ளனர். இன்னும் மீதமுள்ள 30-க்கும் மேற்பட்டோரிடம் தொடர்ந்து பேசி வருகிறோம். இவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் மீண்டும் இடைநின்று விடக்கூடாது என்பதற்காக கண்காணித்து வருகிறோம்”என்றனர்.

காவல் ஆணையர் வே.பாலகிருஷ்ணன் கூறும்போது, ‘‘சிறார்களுக்கு கல்வி அவசியமாகும். பொதுவாக தவறு செய்யும் சிறார்களின் பின்புலத்தை பார்க்கும்போது, பெற்றோர் கண்காணிப்பு இல்லாதது, பள்ளிகளில் இருந்து இடைநின்றது போன்ற காரணங்கள் தெரியவந்தது. பெற்றோர் இல்லாத சிறார்கள், மாற்றுத்திறனாளி சிறார்கள் பட்டியல் காவல்துறையிடம் உள்ளது.

பள்ளியில் சேர்ந்து படிக்கும் போது, தவறான எண்ணங்களைக் கொண்ட நபர்களுடன் சேருவது தவிர்க்கப்படும். காவலர்கள் மூலம் இப்பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடைநின்ற அனைவரையும் கண்டறிந்து பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்றார்.

# ஆசிய போட்டியில் இந்திய வீரர்களுக்கு தடை எதிரொலி சீன பயணத்தை ரத்து செய்த அமைச்சர் அனுராக்





புதுடெல்லி ,செப்.23-

இந்தியாவின் மூன்று தடகள வீரர்களை ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க சீனா தடை விதித்துள்ள நிலையில், சீனாவுக்கு செல்ல இருந்த தனது பயணத்தை மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ரத்து செய்துள்ளார்.

சீனாவின் ஹோங்சு நகரில் இன்று 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டி தொடங்கவுள்ளது. இதில் கலந்து கொள்ளச் சென்ற அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த வுஷூ (WUSHU) வீரர்களான நைமன் வங்க்சு, ஒனிலு தேகா மற்றும் மேபுவுங் லாம்கு ஆகியோர் சீனாவில் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்தது. இதற்கு இந்திய வெளியுறவுத் துறை கடும் கண்டனத்தைப் பதிவு செய்தது.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறுகையில், "சீனாவின் இந்த நடவடிக்கை, ஆசிய விளையாட்டின் உணர்வுகளை அவமதிப்பதாக, விளையாட்டு போட்டிகளின் விதிமுறைகளையும் மீறுவதாக உள்ளது" என்று கூறியுள்ளது.

இந்நிலையில், இந்திய வுஷூ அணியில் மீதமிருக்கும் 7 வீரர்கள், அணி நிர்வாகிகள் ஹாங்காங் சென்று அங்கிருந்து சீனாவுக்குள் நுழைகின்றனர். தடைவிதிக்கப்பட்டுள்ள இந்திய வீரர்களை விளையாட்டுத் துறை அமைச்சகம் இந்தியாவுக்கு திரும்ப அழைத்துள்ளது.

இதனிடையே, இந்தச் சம்பவம் குறித்து விளக்கமளித்துள்ள சீனாவின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர், " விளையாட்டு போட்டியினை நடத்தும் நாடு என்ற அடிப்படையில், சட்டபூர்வமான ஆவணங்களுடன் ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள வரும் வீரர்களை சீனா வரவேற்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையில் நீடித்து வரும் அருணாச்சலப் பிரதேச எல்லைப் பிரச்சினை காரணமாக அப்பகுதியை இந்தியாவின் பகுதியாக ஏற்க சீனா மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# உலக மல்யுத்த போட்டி

## வெண்கலம் வென்றார் இந்திய வீராங்கனை அன்திம் பன்ஹால்



**பெல்கிரேடு : செப். 23, உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி செர்பியா தலைநகர் பெல்கிரேடில் நடந்து வருகிறது.**

பெண்களுக்கான பிரீஸ்டைல் 53 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டி நேற்று நடைபெற்றது. இதில் 19 வயது இந்திய வீராங்கனை அன்திம் பன்ஹால், 2 முறை ஐரோப்பிய சாம்பியன் ஜோனா மால்கிரேன் (ஸ்வீடன்) எதிர்கொண்டார். 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலக சாம்பியன்ஷிப்பில் 2 முறை சாம்பியன் பட்டம் வென்றவரான அரியானாவை சேர்ந்த அன்திம் தொடக்கம் முதல் சிறப்பாக ஆடினார்.

இறுதியில், 16-6 என்ற புள்ளி கணக்கில் வென்று வெண்கலப் பதக்கம் பெற்றார். மேலும், பாரிசில் அடுத்த ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றார்.

# வங்கத்தை வீழ்த்தி இந்தியா வெற்றி



**ஹாங்சோ : செப். 23, ஆசிய விளையாட்டுப் போட்டியின் கால்பந்தில் விளையாட்டில் இந்திய ஆடவர் அணி ஏ-பிரிவில் இடம் பெற்றுள்ளது.**

இந்த பிரிவில் சீனா, வாங்கதேசம், மியான்மர் அணிகள் இடம் பெற்றுளன. இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் சீனாவிடம் 1-5 என்ற கோல் கணக்கில் போராடி தோற்றது. தொடர்ந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற 2வது ஆட்டத்தில் வங்கதேசத்தை எதிர்கொண்டது. முதல் பாதி ஆட்டம் கோலின்றி சமனில் முடிந்தது. வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் இருந்த இந்திய வீரர்கள் 2வது பாதியில் வேகத்தை அதிகப்படுத்தினர். வங்கமும் வெற்றிக்காக முனைப்புக் காட்டியது. அதன் விளைவாக ஆட்டத்தில் அவ்வப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தொடர்ந்து ஆட்டத்தின் 84வது நிமிடத்தில் வங்க கேப்டன் ரகமத் மியா செய்த தவறால் இந்தியாவுக்கு பெனால்டி கிக் வாய்ப்பு கிடைத்தது. அதை சரியாக பயன்படுத்திய இந்தியக் கேப்டன் சுனில் சேட்ரி கோலடித்து அணிக்கு முன்னிலைப் பெற்று தந்தார். அடுத்த சில நிமிடங்களில் ஆட்டம் முடிவுக்கு வர இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் முதல் வெற்றியை பதிவு செய்தது. இந்திய அணி தனது 3வது ஆட்டத்தில் நாளை மியான்மரை எதிர்கொள்கிறது. அதில் வெற்றிப் பெறும் அணி நாக் அவுட் சுற்றுக்குள் நுழையும்.

டிராவானாலும் கோல்கள் அடிப்படையில் மியான்மர் நாக் அவுட் சுற்றுக்கு முன்னேறும். தொடர்ந்து 2 ஆட்டங்களில் தோற்ற வங்கதேசம் நாக் அவுட் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. அந்த அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் சீனாவுடன் மோத உள்ளது.

# உலகக்கோப்பை கிரிக்கெட் சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.33 கோடி பரிசு ஐசிசி அறிவிப்பு



**டெல்லி : செப். 23, இந்தியாவில் நடக்கும் 50 ஓவர் உலகக்கோப்பையை வெல்லும் அணிக்கு சுமார் ரூ. 33 கோடி பரிசாக வழங்கப்படும் என ஐசிசி அறிவித்துள்ளது.**

2வது இடம் பிடிக்கும் அணிக்கு ரூ.16.50 கோடி பரிசுத்தொகை வழங்கப்படும். உலகக்கோப்பை அரையிறுதியில் தோற்கும் அணிக்கு சுமார் ரூ.6.50 கோடி பரிசாக வழங்கப்படும் என ஐசிசி அறிவித்திருக்கிறது.

### சீனாவின் ஹாங்சோவ் நகரில்

# 19வது ஆசிய விளையாட்டு போட்டி இன்று தொடக்கம் பதக்க வேட்டைக்கு இந்தியா ஆயத்தம்



**ஹாங்சோவ் : செப். 23, 1951ம் ஆண்டு முதல் ஆசிய விளையாட்டு போட்டிகள் 4 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது.**

அதன்படி 19வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவ் நகரில் கடந்த ஆண்டு நடைபெறவேண்டிய நிலையில் கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்டு இந்த ஆண்டு நடத்தப்படுகிறது. அதன்படி இன்று போட்டி தொடர் தொடங்குகிறது. வரும் அக்டோபர் 8ம் தேதி வரை நடக்கிறது. இதில் 45 நாடுகளை சேர்ந்த 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். மொத்தம் 40 வகையான விளையாட்டுகள் 61 பிரிவுகளில் மொத்தம் 482 போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்தியா சார்பில் 655 வீரர்கள் 39 வகையான போட்டிகளில் பங்கேற்கின்றனர். இன்று கண்கவர் தொடக்க விழா நிகழ்ச்சிகள் நடக்கிறது.

பசுமை அடிப்படையில் நடைபெறும் இந்த விழாவில் வாண வேடிக்கைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கலைநிகழ்ச்சிகள் மற்றும் போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் அணிவகுப்பு நடக்கிறது. ஒவ்வொரு நாடும் தங்கள் தேசிய கொடியுடன் அணிவகுப்பில் நடைபோடும். இந்தியா சார்பில் ஆடவர் ஹாக்கி அணி கேப்டன் ஹர்மன்பிரீத் சிங், குத்துச்சண்டை வீராங்கனை லவ்லினா தேசிய கொடியை ஏந்திச் செல்ல உள்ளனர். இந்த விளையாட்டுகளில் பதக்கம் வெல்லும் வீரர், வீராங்கனைகள் 2024 பாரிஸ் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற வாய்ப்பு உள்ளது. இதனால் ஆசிய விளையாட்டு தொடர் முக்கியமானதாக கருதப்படுகிறது. டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இந்திய ஆடவர் ஹாக்கி அணி இந்த முறை தங்கம் வெல்லும் முனைப்பில் உள்ளது.

தனது முதல் போட்டியில் நாளை உஸ்பெகிஸ்தானுடன் மோத உள்ளது. இதை தவிர மல்யுத்தம், துப்பாக்கி சுடுதல், வில்வித்தை, கபடி, கிரிக்கெட், ஈட்டி எறிதல், ஓட்டபந்தயம், குத்துச்சண்டை உள்ளிட்ட பிரிவுகளிலும் இந்தியா பதக்கங்களை குவிக்க தயாராக உள்ளது. ஆடவருக்கான பளுதூக்குதல், ஜிம்னாஸ்டிக்ஸ், ஹேண்ட்பால், ரக்பி, தற்காப்பு கலை, மகளிர் பளுதூக்குதலில் பதக்கத்தை எதிர்பார்க்கலாம்.

ஈட்டி எறிதலில் தங்க மகன் நீரஜ் சோப்ரா தங்கம் வெல்வது உறுதி. போட்டிகள் அனைத்தையும் சோனி ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது. ஹாங்சோவில் அமைந்துள்ள ஹாங்சோ ஸ்போர்ட்ஸ் பார்க் ஸ்டேடியத்தில் இந்திய நேரப்படி இன்று மாலை 5.30 மணிக்கு தொடக்க விழா நடைபெற உள்ளது.

# பாகிஸ்தானின் கிரிக்கெட் வாரிய பொறுப்பில் இருந்து முகமது ஹபீஸ் விலகல்



**பாகிஸ்தான் : செப். 23, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தொழில்நுட்பக் குழுவில் முன்னாள் வீரர் முகமது ஹபீஸ் இடம் பெற்று இருந்தார்.**

2 மாதங்களுக்கு முன்பு இப்பொறுப்பில் அவர் நியமிக்கப்பட்டார். முன்னாள் கேப்டன்கள் இன்சமாம்-உல்-ஹக், மிஸ்பா-உல்-ஹக் ஆகியோரையும் கொண்ட இக்குழு அணியின் முன்னேற்றத்திற்காக ஆலோசனைகளை வழங்கும்.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகுவதாக முகமது ஹபீஸ் திடீரென்று அறிவித்தார். இது தொடர்பாக அவர் டுவிட்டரில் கூறும்போது, பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன். எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கான எனது நேர்மையான ஆலோசனைகள் தேவைப்படும் போதெல்லாம் நான் எப்போதும் அளிப்பேன். எப்போதும் போல் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு எனது வாழ்த்துக்கள் என்று கூறியுள்ளார். ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணியின் செயல் திறனை மதிப்பீடுவதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த கிரிக்கெட் வாரிய ஆலோசனை கூட்டத்தில் முகமது ஹபீசும் கலந்து கொண்டார். இதில் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், கேப்டன் பாபர் ஆசம், துணை கேப்டன் ஷதாப்கான் மற்றும் மிஸ்பா-உல்-ஹஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 55 அணிகள் பங்கேற்கும் தேசிய கூடைப்பந்து போட்டி

## சென்னையில் நேற்று தொடங்கியது



**சென்னை : செப். 23, நாடு முழுவதும் இருந்து ஆண்கள் பிரிவில் 30 அணிகளும், பெண்கள் பிரிவில் 25 அணிகளும் மோதுகின்றன.**

தமிழ்நாடு கூடைப்பந்து சங்கம் சார்பில் ஒரு அணியில் 3 பேர் இடம் பெறும் 3-வது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று முதல் நாளை வரை நடைபெறுகிறது. இந்த போட்டியில் நாடு முழுவதும் இருந்து ஆண்கள் பிரிவில் 30 அணிகளும், பெண்கள் பிரிவில் 25 அணிகளும் கலந்து கொண்டு மோதுகின்றன.

இந்த போட்டியில் இரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு முறையே ரூ.3 லட்சம், ரூ.2 லட்சம், ரூ.1 லட்சம் பரிசாக வழங்கப்படும். மேலும் இந்த போட்டியில் இரு பிரிவிலும் முதல் 7 இடங்களை பிடிக்கும் அணிகள் கோவாவில் அடுத்த மாதம் நடைபெறும் தேசிய விளையாட்டு போட்டிக்கு தகுதி பெறும்.

# உலக கோப்பை பாகிஸ்தான் அணி அறிவிப்பு



**பாகிஸ்தான் : செப். 23, உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் வருகிற அக்டோபர் 5-ந்தேதி தொடங்குகிறது.**

10 அணிகள் பங்கேற்கும் இப்போட்டித் தொடரில் பெரும்பாலான நாடுகள் தங்களது அணிகளை அறிவித்து விட்டன. உலக கோப்பை போட்டியில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் நேற்று அறிவித்தது. கேப்டனாக பாபர் ஆசம் நீடிக்கிறார். சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பை போட்டியில் காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் நசீம் ஷா குணமடையாததால் இடம் பெறவில்லை. அவருக்கு பதில் ஹசன் அலி சேர்க்கப்பட்டுள்ளார். சுழற்பந்து வீச்சாளர் உஸ்மா மிர் இடம் பெற்றுள்ளார்.

அணி விபரம் : பாபா ஆசம் (கேப்டன்), பகர் ஜமான், இமாம்-உல்-ஹக், அப்துல்லா ஷபீக், முகமது ரிஸ்வான், சவுத் ஷகீல், இப்திகார் அகமது, அகா சல்மான், முகமது நவாஸ், ஷதாப் கான், உஸ்மா மிர், ஷகீன்ஷா அப்ரிடி, ஹாரிஸ் ரவூப், முகமது வாசிம், ஹசன் அலி.

வரலாறு சினிமா

# லவ் டுடே படத்தின் வசூல் இத்தனை கோடியா தயாரிப்பாளர் பதிவால் வெளியான உண்மை



**சென்னை : செப். 23, ஜெயம் ரவி நடிப்பில் 2019-ஆம் ஆண்டு வெளியான கோமாளி படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் பிரதீப் ரங்கநாதன்.**

கடந்த ஆண்டு இவர் இயக்கத்தில் வெளியான படம் 'லவ் டுடே'. இப்படத்தை ஏஜிஎஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்திருந்தது. பிரதீப் ரங்கநாதன் கதாநாயகனாக நடித்திருக்கும் இப்படத்தில் சத்யராஜ், ராதிகா, யோகி பாபு, ரவீனா மற்றும் ஆதித்யா கதிர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்திருந்த இப்படம் ரசிகர்களிடமும் விமர்சகர்களிடமும் நல்ல வரவேற்பை பெற்று 100 நாட்களை கடந்தது. சிறிய பட்ஜெட்டில் உருவான இப்படம் பெரும் வெற்றியை பெற்றது. இதையடுத்து 'லவ் டுடே' திரைப்படம் இந்தியில் ரீமேக் செய்யப்படவுள்ளதாக அறிவிப்பு வெளியானது.

இந்நிலையில், சமூக வலைதளத்தில் பயனர் ஒருவர் ரூ.100 கோடி கிளப்பில் இணைந்த படங்களை பட்டியலிட்டிருந்தார். அதில் பிரதீப் ரங்கநாதன் பெயர் இல்லாததை பார்த்த தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, 'லவ் டுடே' படமும் ரூ.100 கோடி வசூலித்ததாக பதிவிட்டுள்ளார். இதன் மூலமாக தனது இரண்டாவது படத்திலே ரூ. 100 கோடி கிளப்பில் பிரதீப் ரங்கநாதன் இணைந்துள்ளது உறுதியாகியுள்ளது.

# சதீஷ் ஜோடியாக மோனிகா



**சென்னை : செப். 23, தி மாபோகோஸ் நிறுவனம் சார்பில் பிரதீப் மகாதேவன் தயாரிக்க, பிரவீன் சரவணன் இயக்கத்தில் சதீஷ், சுரேஷ் ரவி நடித்துள்ள படம், 'முஸ்தபா முஸ்தபா'.**

இது டார்க் காமெடி ஜானரில் உருவாகியுள்ளது. மற்றும் மோனிகா சின்னகோட்லா, மானசா சவுத்ரி, கருணாகரன், புகழ், பாவெல் நவகீதன், ஐஸ்வர்யா தத்தா, விஜே மகேஸ்வரி, விஜே பார்வதி, லிவிங்ஸ்டன், சாம்ஸ், சூப்பர் குட் சுப்பிரமணி, தீப்ஸ், உமா பத்மநாபன், வினோத் நடித்துள்ளனர்.

கே.எஸ்.விஷ்ணு ஒளிப்பதிவு செய்ய, எம்.எஸ்.ஜோன்ஸ் ரூபர்ட் இசை அமைத்துள்ளார். சதீஷ் ஜோடியாக மோனிகா சின்னகோட்லா, சுரேஷ் ரவி ஜோடியாக மானசா சவுத்ரி நடித்துள்ளனர். கருணாகரன் காமெடி செய்துள்ளார். புகழ், பாவெல் நவகீதன் இருவரும் வித்தியாசமான காமெடி வில்லன்களாக நடித்துள்ளனர். தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகிறது. விரைவில் ரிலீஸ் தேதி அறிவிக்கப்படுகிறது.

# சந்திரமுகி –2 ரன்னிங் டைம் என்ன தெரியுமா அதிகாரப்பூர்வ அறிவிப்பு



**சென்னை : செப். 23, இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி இருக்கும் திரைப்படம் 'சந்திரமுகி-2'.**

இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் செப்டம்பர் 28-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்திற்கு தணிக்கைக்குழு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும், இப்படத்தின் ரன்னிங் டைம் 2 மணி நேரம் 37 நிமிடம் உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# ஓமன் பயணத்தை நிறைவு செய்து சென்னை திரும்பிய அஜித்



**சென்னை : செப். 23, தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித்குமார் நடிப்பதை தாண்டி பைக் சுற்றுப்பயணத்தையும் மேற்கொண்டு வருகிறார்.**

பைக் பிரியராக இருக்கும் அஜித் உலக சுற்றுப்பயணம் சென்றார். சமீபத்தில் இவர் ஓமன் நாட்டில் பைக்கில் செல்லும் வீடியோ வைரலானது.

இந்நிலையில், நடிகர் அஜித், ஓமன் நாட்டில் இருந்து சென்னை திரும்பியுள்ளார். இவர் சென்னை விமான நிலையத்திலிருந்து வெளிவரும் வீடியோவை ரசிகர்கள் இணையத்தில் ட்ரெண்டாக்கி வருகின்றனர். மேலும், 'விடாமுயற்சி' படப்பிடிப்பு தொடங்கவுள்ளதால் அவர் சென்னை திரும்பியுள்ளதாக கமெண்ட் செய்து வருகின்றனர்.

நடிகர் அஜித், இயக்குனர் மகிழ்திருமேனி இயக்கத்தில் 'விடாமுயற்சி' திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமானார். லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த வாரம் தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கமல்ஹாசனின் 'நாயகன்' ரீ–ரிலீஸ்



**சென்னை : செப். 23, கடந்த 2006 ஆகஸ்ட் 25ம் தேதி, கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்து திரைக்கு வந்து வெற்றிபெற்ற 'வேட்டையாடு விளையாடு' படம், சமீபத்தில் மீண்டும் வெளியிடப்பட்டு ரசிகர்களிடம் வரவேற்பு பெற்றது.**

அதுபோல், கடந்த 2001ல் கமல்ஹாசன் நடிப்பில் வெளியான 'ஆளவந்தான்' படத்தையும் ரீ-ரிலீஸ் செய்தனர். இந்நிலையில், கடந்த 1987 நவம்பர் 27ம் தேதி சிங்கீதம் சீனிவாச ராவ் இயக்கத்தில் கமல்ஹாசன், அமலா நடித்து வெளியான 'பேசும் படம்' என்ற முழுநீள வசனங்களே இல்லாத படத்தையும் டிஜிட்டலில் புதுப்பித்து ரீ-ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளனர். இந்த வரிசையில், மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த 'நாயகன்' படமும் ரீ-ரிலீஸ் செய்யப்படுகிறது.

தற்போது இப்படத்தை டிஜிட்டலில் புதுப்பிக்கும் பணிகள் நடந்து வருகிறது. வரும் நவம்பர் முதல் வாரத்தில் 'நாயகன்' படத்தை ரீ-ரிலீஸ் செய்கின்றனர். இப்படம் கடந்த 1987ல் திரைக்கு வந்தது. சரண்யா பொன்வண்ணன், ஜனகராஜ், டெல்லி கணேஷ், நாசர், நிழல்கள் ரவி, குயிலி நடித்திருந்தனர்.

இளையராஜா இசையில் 'நீ ஒரு காதல் சங்கீதம்', 'அந்தி மழை மேகம்', 'நான் சிரித்தால் தீபாவளி', 'நிலா அது வானத்து மேலே', 'தென்பாண்டி சீமையிலே' ஆகிய பாடல்கள் மிகப்பெரிய ஹிட்டானது. 'நாயகன்' படத்துக்காக கமல்ஹாசனுக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருது கிடைத்தது. இளையராஜா இசை அமைத்த 400வது படம் இது.



வரலாறு உலகம்

# உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்கா பயணம் வெள்ளை மாளிகையில் ஜோ பைடனுடன் பேச்சுவார்த்தை



**வாஷிங்டன் : செப். 23,**

**வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் ஜோ பைடன் மற்றும் ஜெலன்ஸ்கி இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.**

உக்ரைன் மீதான ரஷியாவின் ராணுவ நடவடிக்கை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதில் உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்கி வருகின்றன. இதனிடையே அமெரிக்க அரசு மேலும் தங்களுக்கு ராணுவ உதவிகளை வழங்க வேண்டும் என ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்து வருகிறார்.

இந்த நிலையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்காவிற்கு சென்றுள்ளார். வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகைக்கு சென்ற ஜெலன்ஸ்கி மற்றும் அவரது மனைவி ஒலெனா ஜெலன்ஸ்கா ஆகியோரை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் ஆகியோர் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து ஜோ பைடன் மற்றும் ஜெலன்ஸ்கி இடையே வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது உக்ரைனுக்கு கூடுதலாக ஆயுதங்கள், ராணுவ தளவாடங்கள் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீது ரஷியா போரை தொடங்கிய பிறகு அதிபர் ஜோ பைடன், அதிபர் ஜெலன்ஸ்கி இடையே நடைபெறும் மூன்றாவது சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா, கனடா அரசுகளுடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம்

## வெள்ளை மாளிகை தகவல்



**வாஷிங்டன் : செப். 23,**

**இந்தியாவால் தேடப்படும் பல சீக்கிய பயங்கரவாதிகள் சிலர் கொல்லப்பட்டனர்.**

கனடாவில் நிகழ்ந்த இந்தக் கொலைகளுக்கு இந்தியாதான் காரணம் என கனடா குற்றம் சாட்டியது. தனது தூதரை வெளியேற்றிய கனடாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், கனடா உயர் தூதரக அதிகாரியை நாட்டை விட்டே வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டது.

கனடா வாழ் மக்களுக்கு விசா வழங்க இந்தியா இடைக்கால தடை விதித்துள்ளது. இதனால் இருநாடுகள் இடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த விவகாரத்தில் அமெரிக்க அரசின் நிலைப்பாடு குறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜேக்சல்லிவான் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தார். அப்போது அவர் நாங்கள் கனடா அரசின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். மேலும் நாங்கள் இந்திய அரசாங்கத்துடனும் தொடர்பில் இருக்கிறோம். அமெரிக்கா மற்றும் கனடா இடையிலான உறவில் பிளவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் கருத்தை நான் உறுதியாக நிராகரிக்கிறேன். குற்றச்சாட்டுகளை நாங்கள் தொடர்ந்து கவனித்து வருகிறோம். விரைவில் விசாரணை முன்னெடுத்துச் செல்லப்படுவதை காண விரும்புகிறோம் என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜேக் சல்லிவான் தெரிவித்துள்ளார்.

# லெபனானில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்தில் துப்பாக்கிச்சூடு



**பெய்ரூட் : செப். 23,**

**லெபனானில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பப்பட்ட சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியது.**

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அமெரிக்க தூதரக அலுவலகம் செயல்படுகிறது. இங்கு இரவு நேரத்தில் மர்ம நபர் ஒருவர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதனையடுத்து பாதுகாப்பு கருதி அங்கு ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

அதிர்ஷ்டவசமாக இந்த துப்பாக்கிச்சூட்டில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என தூதரக செய்தித்தொடர்பாளர் ஜேக் நெல்சன் தெரிவித்தார். இந்த சம்பவத்துக்கு இதுவரை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இதற்கிடையே போலீசார் அந்த பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் அங்கு சிறிதுநேரம் பதற்றம் நிலவியது.

# பணக்காரர்களுக்கு அதிக வரி விதித்து, ஏழைகளை பாதுகாக்க வேண்டும்

## பாகிஸ்தானுக்கு சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தல்



**நியூயார்க் : செப். 23,**

**பாகிஸ்தானின் பொருளாதாரம் நிலைப்பெற வலிமையான கொள்கைகள் அவசியம் என்று கிறிஸ்டாலினா ஜார்ஜிவா தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தானில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க கடன் உதவி வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் பாகிஸ்தான் அரசு கோரிக்கை விடுத்தது. இதனை ஏற்று பாகிஸ்தானுக்கு சர்வதேச நாணய நிதியம் 3 பில்லியன் டாலர் நிதி ஒதுக்க அனுமதி அளித்துள்ளது.

இந்த நிலையில் ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் பருவநிலை உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக நியூயார்க் சென்றுள்ள பாகிஸ்தானின் இடைக்கால பிரதமர் அன்வாரூல் ஹக் காகர், அங்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டாலினா ஜார்ஜிவாவை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, பாகிஸ்தானில் உள்ள வசதி படைத்தவர்களிடம் இருந்து அதிக வரி வசூலிக்கவும், ஏழை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் கிறிஸ்டாலினா வலியுறுத்தினார். மேலும் பாகிஸ்தானின் பொருளாதாரம் நிலைப்பெற வலிமையான கொள்கைகள் அவசியம் என்றும், அதன் மூலம்தான் நிலைத்தன்மையையும் ஒருங்கிணைந்த வளர்ச்சியையும் எட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெட்ரோல், டீசல் ஏற்றுமதிக்கு தற்காலிக தடை ரஷியா அறிவிப்பு







**ரஷியா : செப். 23,**

**உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்தி வருகிறது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் இந்த போர் காரணமாக உலகளாவிய அளவில் உணவுதட்டுப்பாடு, பொருளாதார மந்தநிலை உருவாகும் சூழ்நிலை உருவாகியுள்ளது.**

இதற்கிடையே மேற்கத்திய நாடுகள் ரஷியாவுக்கு பொருளாதார அளவில் பல்வேறு தடைகளை விதித்துள்ளன. இதனால் ரஷியாவில் பணவீக்கம், விலைவாசி ஏற்றம் அதிகரித்து மக்கள் அவலநிலையை எதிர்கொண்டு வருகிறார்கள். ரஷியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை அதிகரித்து காணப்படுகிறது.

இந்த நிலையில உள்நாட்டில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றுமதிக்கு ரஷியா தற்காலிக தடை விதித்துள்ளது. ரஷியா ஒரு நாளைக்கு 9 லட்சம் பேரல்கள் என்ற வகையில் டீசலை ஏற்றுமதி செய்கிறது. 60 ஆயிரம் முதல் ஒரு லட்சம் பேரல்கள் என்ற வகையில் பெட்ரோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு வந்த நிலையில், ரஷியாவில் எரிபொருள் விலை 4 சதவீதம் குறைந்துள்ளது. இந்த தற்காலிக தடையால் உலக மார்க்கெட்டில் விலை உயர வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. யூரேசியன் பொருளாதார யூனியன் வர்த்தக அமைப்பில் உள்ள அர்மேனியா, பெலாரஸ், கிர்கிஸ்தான், கஜகஸ்தான் நாடுகளுக்கு இந்த தடை கிடையாது.

## இந்தியாவுடன் மோதல் அதிகரித்துள்ள நிலையில்

# நாங்கள் பிரச்னையை தூண்டவில்லை

## கனடா பிரதமர் திடீர் பேட்டி



**ஒட்டவா : செப். 23,**

**இந்தியாவுடன் மோதல் அதிகரித்துள்ள நிலையில், நாங்கள் பிரச்னையை தூண்டிவிட வில்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள்ளார்.**

கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப் பிரிவின் தலைவரும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்பவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

இதன் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ‘இந்திய அரசின் முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன’ என்று கூறினார். ஆனால், ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச்சாட்டுகளை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இந்த விவகாரத்தால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளும் ஏற்கனவே நடைமுறையில் இருந்த விஷயங்களில் நிறைய கட்டுப்பாடுகளையும், தடைகளையும் விதித்து வருகின்றன.

இந்நிலையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அளித்த பேட்டியில், ‘இந்தியா வளர்ந்து வரும் மிக முக்கியத்துவமான நாடு. நாங்கள் பிரச்னைகளைத் தூண்டி விடவோ அல்லது பிரச்னைகளை ஏற்படுத்தவோ விரும்பவில்லை.

இருநாடுகளும் தொடர்ந்து இணைந்து பணியாற்ற வேண்டிய நாடுகள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நிஜ்ஜார் கொல்லப்பட்ட விஷயத்தின் உண்மையை வெளியே கொண்டு வரவும், நீதியை நிலைநாட்டவும், எங்களுடன் இந்திய அரசு இணைந்து செயல்பட விரும்புகிறோம்’ என்று கூறியுள்ளார்.

# அமெரிக்க பாப் இசை பாடகி குறித்து முதல் கல்வி கருத்தரங்கம் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் நடக்கிறது



**அமெரிக்கா : செப். 23,**

**அமெரிக்காவை சேர்ந்தவர் பிரபல பாப் இசை பாடகி டெய்லர் ஸ்விப்ட். 33 வயதான இவர் கிராமி விருதை வென்றுள்ளார்.**

பல்வேறு இசை நிகழ்ச்சிகள் மூலம் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை கொண்டுள்ள இவர், கொரோனா பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த தனது இசை சுற்றுப்பயணத்தை சமீபத்தில் தொடங்கினார்.

5 கண்டங்கள், 17 மாநிலங்களில் 131 இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அவர் திட்டமிட்டுள்ளார். இவரது இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் பகுதிகளில், கொரோனாவுக்கு பிறகு முடங்கிய பொருளாதாரம் மீண்டு வருவதாக ஏற்கனவே பல்வேறு பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துவந்தனர்.

இந்நிலையில் இசைத்துறை மூலம் பாப் கலாசாரம், பொருளாதாரம் என அனைத்திலும் டெய்லர் ஸ்விப்ட்டின் தாக்கம் குறித்து முதல் கல்வி கருத்தரங்கை ஆஸ்திரேலியா நடத்த உள்ளது. அடுத்தாண்டு (2024) பிப்ரவரி 11-ந்தேதி முதல் 13-ந்தேதி வரை மெல்போர்ன் பல்கலைக்கழகத்திலும், ஆன்லைன் வழியாகவும் இந்த கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இது ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து உள்பட 7 பல்கலைக்கழகங்களை சேர்ந்த அறிஞர்களால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தென்கொரியாவில் எதிர்க்கட்சி தலைவருக்கு பிடிவாரண்டு



**சியோல் : செப். 23,**

**தென்கொரியாவில் எதிர்க்கட்சி தலைவருக்கு பிடிவாரண்டு பிறப்பித்து உத்தரவிடப்பட்டது.**

தென்கொரியாவில் அதிபர் யூன் சுக் இயோல் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. இங்கு பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் தலைவராக லீ ஜே-மியுங் உள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன் ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலைய கழிவுநீரை கடலில் கலக்கும் திட்டத்துக்கு அரசாங்கம் அனுமதி அளித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இவர் கடந்த 3 வாரங்களாக உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகிறார்.

இதற்கிடையே லீ மீது ஊழல் உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த சூழ்நிலையில் அங்கு நாடாளுமன்ற கூட்டத்தொடர் கூடியது. இதனால் அவர் மீது பிடிவாரண்டு பிறப்பிக்க நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் இவருக்கு எதிராக பெரும்பான்மை எம்.பி.க்கள் வாக்களித்ததால் இவரை கைது செய்ய தென் கொரிய அரசாங்கம் பிடிவாரண்டு பிறப்பித்துள்ளது. எனினும் தன் மீதான இந்த குற்றச்சாட்டுகளை லீ ஜே-மியுங் முற்றிலும் மறுத்துள்ளார்.

## அப்பாவுக்காக காத்திருந்த குழந்தை

# கூகுள் மேப் காட்டிய பாதையில் சென்றவருக்கு நேர்ந்த சோகம்



**அமெரிக்கா : செப். 23,**

**கூகுள் மேப் காட்டிய பாதையில் சென்ற தனது கணவன், பாலத்தில் இருந்து கீழே விழுந்து இறந்ததாக கூகுள் நிறுவனத்தின் மீது அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.**

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகானத்தைச் சேர்ந்தவர் ஃப்லிப் பேக்சோன். இவர் தனது மனைவி அலிகா மற்றும் இரு மகள்களுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில், தனது மூத்த மகள் பிறந்தநாள் விழாவை கொண்டாட கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வீட்டுக்கு திரும்பியுள்ளார் பேக்சோன். நள்ளிரவு நேரத்தில் வீடு திரும்பிய அவர், கூகுள் மேப்பின் உதவியுடன் காரை ஓட்டி வந்துள்ளார். நல்ல மழையும் பெய்த நிலையில், ஹிக்கேரி என்ற இடத்திற்கு அருகே சென்றபோது, பழுதடைந்த பாலத்தில் இருந்து, 20 அடி ஆழ பள்ளத்தில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறிப்பிட்ட அந்த பாலம் 2013ம் ஆண்டே பழுதடைந்துவிட்ட நிலையில், இன்று வரை அது சரிசெய்யப்படாததாக தெரிகிறது. இந்நிலையில், கூகுள் மேப்பை பார்த்து பாலத்தில் ஏறிய பேக்சோன் பரிதாபமாக பலியானார். பழுதடைந்த பாலத்தில் எந்த வித தடுப்போ, எச்சரிக்கை பலகையோ வைக்கப்படாததாலும், கூகுள் மேப் காட்டிய தவறான வழியாலும் தங்களது பேக்சோன் உயிர் பிரிந்ததாக அவர்களது குடும்ப உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

மூத்த மகளுக்கு தற்போது 9வது பிறந்தநாள் கொண்டாடப்பட்ட நிலையில், அப்பாவுக்கு என்ன ஆயிற்று என்று இன்றளவும் கேட்டு வருவதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். மேலும், உடைந்துபோன பாலத்தில் வழிகாட்டியதற்காக கூகுள் நிறுவனம் மீதும் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்நிலையில், பாலம் பழுதானதால் கூகுள் மேப்பில் அப்டேட் செய்யுமாறு பெண் ஒருவர் கூகுள் நிறுவனத்திடன் முறையிட்ட நிலையில், “உங்களது கருத்து சரிபார்க்கப்படும். இதனை எங்களது கவனத்திற்கு கொண்டு வந்தமைக்கு நன்றி” என்றும் பதில் கிடைத்துள்ளது. இருந்தபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என்று கூறி குடும்பத்தார் வழக்கு தொடர்ந்த நிலையில், இது குறித்து பரிசீலித்து வருவதாக கூகுள் தரப்பு தெரிவித்துள்ளது.

# உக்ரைன் மீது ரஷியா சரமாரி டிரோன் தாக்குதல் கட்டிட இடிபாடுகளில் சிக்கி இருவர் பலி



**கீவ் : செப். 23,**

**உக்ரைன் மீது ரஷியா நடத்திய டிரோன் தாக்குதலில் சிக்கி இருவர் பலியாகினர். மேலும் 18 பேர் காயமடைந்தனர்.**

ரஷியா-உக்ரைன் போரில் சமீப காலமாக இரு நாடுகளும் மாறிமாறி டிரோன் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை உக்ரைன் தலைநகர் கீவ், கார்கிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ரஷியா சரமாரியாக டிரோன் தாக்குதல் நடத்தியது. இதில் அங்கு பல குடியிருப்பு பகுதிகள், வணிக வளாகங்கள் சேதமடைந்தன.

மேலும் இந்த தாக்குதலில் உக்ரைனின் தெற்கே உள்ள கெர்சோன் நகரில் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. இந்த கட்டிட இடிபாடுகளில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 18 பேர் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## கண்காட்சியை பார்க்க வரும் பார்வையாளர்களுக்காக


# நிர்வாண மாடல்களுக்கு நடுவே அமைக்கப்படும் பாதை

**லண்டன் : செப். 23,**

**லண்டனில் ராயல் அகாடமி ஆப் ஆர்ட்ஸ் கலை கண்காட்சி இன்று தொடங்கி வருகிற ஜனவரி 1-ந்தேதி வரை நடைபெற உள்ளது.**

இந்த கண்காட்சியில் புகழ்பெற்ற கலைஞர் மெரினா அப்ரமோவிச்சின் படைப்புகள் இடம்பெற உள்ளது. இக்கண்காட்சி எல்லைகளை தாண்டி பார்வையாளர்களை கவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கண்காட்சியில் பார்வையாளர்களாக கலந்து கொள்ள விரும்பும் பார்வையாளர்கள் நிர்வாணமாக நிற்கும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் இடைவெளி வழியாக தங்களது உடல்களை திணிந்துகொண்டு தான் செல்ல வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பேசிய கண்காட்சியின் தலைவர் ஆண்ட்ரியா டார்சியா, இந்த நடைமுறை பாலினம், பாலியல், ஆசை மற்றும் நிர்வாணதன்மை ஆகியவற்றுக்கு இடையேயான மோதலை ஏற்படுத்தும். இந்த கண்காட்சியில் கலைஞர்களின் 50 ஆண்டுகால வாழ்க்கை சிற்பம், வீடியோக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் காட்சிபடுத்தப்பட்டுள்ளது என்றார். நிர்வாண மாடல்கள் வழியாக செல்ல விரும்பாத பார்வையாளர்களுக்கு என்று தனிவழி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.



# மகளிர் இட ஒதுக்கீடு: பெரும்பான்மை பெற்ற அரசின் வலிமை மீண்டும் நிரூபணம்

# மூக்கு உடைந்தாலும் பரவாயில்லை கோவையில் மீண்டும் போட்டியிடுவேன்





# சனாதன சர்ச்சை பேச்சு: தமிழக அரசு, உதயநிதி பதிலளிக்க உத்தரவு


சென்னை / புதுக்கோட்டை | 23.09.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



ராம்தாரி சிங் திங்கர் , இந்திக் கவிஞர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், கல்வியாளர், அரசியல்வாதி (பி.1908) (இ.1974)



அசீமா சாட்டர்ஜி , இந்திய வேதியியலாளர் (பி.1917) (இ.2006)



கு. அழகிரிசாமி , தமிழக எழுத்தாளர் (பி.1923) (இ.1970)



முயீன் கான் , பாக்கித்தானியத் துடுப்பாளர் (பி.1971)

## இன்றைய நினைவு நாள்



பி. யு. சின்னப்பா , தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (இ.1951)



ஜெயச்சாமராஜா உடையார் , மைசூர் சமத்தானத்தின் கடைசி அரசர் (பி.1919) (இ.1974)



சில்க் ஸ்மிதா , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1960) (இ.1996)